# எம். பி.க்கள் சொத்துகளை வெளியிட வற்புறுத்து!

★★

பக்கங்கள் 8 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

மலர்: 19 பங்குனி 11 ரபி ஆகி: 3 இதழ்: 42

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 24-3-77

## ஜனதா நியமித்த குழு யோசனை

### 'வசிப்பிடம் 3000 சதுர அடிக்குள் இருக்கவேண்டும்'

புதுடில்லி, மார்ச் 23

லோக சபை உறுப்பினர்களும், பதவியேற்கவிருக்கும் மந்திரிகளும் தமது சொத்து விபரங்களை வெளிப்படுத்த வேண்டும் எனவும், ஆடம்பரவாழ்க்கைவாழ்வதை நிறுத்திக்கொள்ளவேண்டும் என்றும் இவர்களது வசிப்பிடம் 3000 சதுரஅடிக்கு உட்பட்டதாக இருக்கவேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கடைப்பிடிக்கவேண்டிய நெறிமுறைகள் பற்றி ஆராய நியமிக்கப்பட்டகுழு ஆலோசனை கூறியுள்ளது.

ஜனதா கூட்டணியின் தலைவரை நியமிப்பதின்மூலம் புதிய பிரதமரைத் தேர்ந்தெடுப்பது சம்பந்தமான கூட்டத்தில் கலந்துகொள்ளும் பொருட்டு பாலம் விமான நிலையத்தை வந்தடைந்த ஜெயப்பிரகாஷ் நாராயணுக்கும் ஆச்சாரிய கிருபளானிக்கும் விமான நிலையத்தில் உற்சாகமான வரவேற்பு நடந்தது. 'எங்கள் தலைவரே வருக' என்ற கோஷம் வானைப் பிளந்தது. தொடர்ந்து தலைவர்கள் ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டனர்.

### இன்று பிரதமர் தெரிவு

ஜனநாயககாங்கிரஸ் ஜனதா கூட்டணியின் ஓர் அங்கமே என்றும், தலைவர் தெரிவில் ஜனநாயக காங்கிரஸ் கலந்து கொள்ளாமல் தலைவர் தெரிவு நடைபெறுவதற்கு இல்லை என்றும் அசோக்மேத்தா கூறியிருக்கிறார்.

### ஜெயப்பிரகாஷ் ஜெகஜீவன் சந்திப்பு

ஜெயப்பிரகாஷ் நாராயணை ஜனநாயக காங்கிரஸ் தலைவர்

(8ம் பக்கம் பார்க்க)

# ஆபத்தான நிலையில் தந்தை எஸ். ஜே. வி. ஆஸ்பத்திரியில்!

## கால்தடுக்கி விழுந்தவருக்கு மூர்ச்சை தெளியவில்லை

### கொழும்பிலிருந்து வைத்திய நிபுணர் விரைவு

**மூதறிஞர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் திடீரெனச் சுகவீனமுற்று யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரைக் காப்பாற்றுவதற்காகக் கொழும்பிலிருந்து மூளை நரம்பு சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் கப்ரால் விசேஷ விமானத்தில் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்து அவசர சத்திரசிகிச்சைக்கான ஏற்பாடுகளைக் கவனித்தார்.**

நேற்றிரவு 10 மணிக்கு டாக்டர் கப்ரால் இங்கு வருவாரென எதிர்பார்க்கப்பட்டது. ஆனல் அவர் புறப்படவிருந்த விமானம் பழுதடைந்ததால் மற்றொரு விமானம ஒழுங்கு செய்யப்பட்டது,

நேற்றுக்காலை சுமார் 8 மணியளவில் தெல்லிப்பளையிலுள்ள தமது வீட்டில் காலைப் போசனத்தை முடித்துக்கொண்டு எழுந்து நடக்கையில் கால் தடுக்கி விழுந்த தந்தை செல்வநாயகம் மூர்ச்சையடைந்தார், உடனடியாக டாக்டர்கள் வரவழைகப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டபோதிலும் அவருக்குப் பிரக்ஞை திரும்பவில்லை.

நேற்றிரவு ஒருமணிக்குப் பின்னர்தான் கொழும்பிலிருந்து வந்த விசேஷ விமானத்தில் வைத்திய நிபுணர் டாக்டர் கப்ரால் வந்து சேர்ந்தார், இதற்கு முன்னர் மூதறிஞர் செல்வாவின் நோய்வாய்ப்பட்ட பகுதிகள் 'எக்ஸ்ரே' படம் பிடிக்கப்பட்டன.

நேற்றுக்காலையிலிருந்து நள்ளிரவு வரை மூதறிஞர் செல்வா மூர்ச்சை தெளியவில்லை. ஆஸ்பத்திரியில் திருமதி செல்வநாயகம், திரு. அமிர்தலிங்கம், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், திரு. எஸ். நடராசா ஆகியோர் இரவிரவாக உடனிருந்து கவனித்து வந்தனர்.

மூதறிஞர் செல்வநாயகம் மயக்கம் தெளியாதநிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்ற செய்தி காட்டுத்தீபோல் யாழ். நகரம் எங்கும் பரவியதும் பெருந்தொகையான மக்கள் யாழ். ஆஸ்பத்திரியை முற்றுகையிடத் தொடங்கினர்.

நாலா பக்கங்களிலிருந்தும் நேற்று மாலை 5 மணிக்கு யாழ். பெரியாஸ்பத்திரி 15ம் வார்ட்டிற்கு முன்னல் மக்கள் கூடிவிட்டனர். மக்களை கட்டுப்படுத்த பொலிஸார் வரவழைக்கப்பட்டனர்.

தெல்லிப்பளையில் அவரது இல்லத்திலிருந்து திரு. செல்வநாயகம் மயக்கம் தெளியாத நிலையில், அவசரமவசரமாக, அம்புலன்ஸ்வண்டி வரவழைக்கப்பட்டு நேற்று மாலை 4-45 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டார்.

உடனடியாக யாழ். பெரிய ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர்கள் அவசரசிகிச்சையளிப்பதில் தீவிரமாக ஈடுபட்டனர், ஆஸ்பத்திரியைச் சேர்ந்த நர்சுகள் அற்றெண்டுகளும் மற்றும் சகல ஊழியர்களும் பூரணஒத்துழைப்புக் கொடுத்தனர்.

மாலை 5 மணிக்கு திரு. கதிரவேற்பிள்ளையின்காரில் திருமதி செல்வநாயகம் வந்துசேர்ந்தார்.

கூட்டணியைச் சேர்ந்த திரு. எஸ். நாகராசா, திரு. அ. யோகேஸ்வரன், திரு. எம். ஆலாலசுந்தரம். திரு. தம்பு கந்தையா, கனக மனேகரன் ஆகியோரும் வந்துசேர்ந்தனர்.

15ம் வார்ட் வாசலில், முன்னுள் செனேட்டர் திரு. எஸ். நடராசா, திரு. க. முருகரத்தினம்ஆகியோர் நின்றுகொண்டு மக்களுக்கு நிலைமைபற்றி எடுத்துக்கூறிக்கொண்டிருந்தனர்.

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என், நவரத்தினம் 5-30 மணிபோல் வந்துசேர்ந்தார்.

உடனடியாக உள்ளே சென்று டாக்டர்களுடன் செல்வாவின் உடல்நிலைமைபற்றி கேட்டறிந்தார். அதன்பின் பருத்தித்துறை எம். பி. திரு.கே. துரைரத்தினமும் வந்துசேர்ந்தார்.

சிகிச்சை நடைபெற்றுக்கொண்டிருந்த அறைக்குள் திருமதி செல்வநாயகமும், மற்றும் கூட்டணி பிரமுகர்களும், நின்று நிலைமையைஅவதானித்

[8-ம் பக்கம் பார்க்க[

## செல்வாவின் நலனுக்காகப் பிரார்த்தனை செய்யுங்கள்

### தமிழர் கூட்டணி வேண்டுகோள்

மட்டுவில் வியாழன்

தலைவர் செல்வாவின் உடல் நலனுக்காக பிரார்த்தனையில் ஈடுபடுமாறு தமிழர் கூட்டணி தமிழ் மக்களிடம் வேண்டுகோள்விடுத்துள்ளது. தமிழினத்தின் மாபெரும் தலைவர்



மூதறிஞர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் திடீர் சுகயீனச்செய்தி தமிழ் மக்களை போதிர்ச்சிக்குள்ளாக்கி விட்டது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரியாரின் நலனுக்காக தெய்வவழிபாட்டில் ஈடுபடுமாறும் சகல மத ஆலயங்களிலும் விசேஷ பூசை ஆராதனைகளை நடத்துமாறும் தமிழர் கூட்டணிகேட்டுக் கொண்டுள்ளது. சாவகச்சேரி எம்.பி. திரு. வி. என். நவரத்தினம் இந்த அறிக்கையை விடுத்தார்.

தகவல் கிடைத்ததும் திருகோணமலை எம். பி. திரு. பா. நேமிநாதன் நேற்றிரவு யாழ், வந்து சேர்ந்தார். மற்றும் பல தமிழர் கூட்டணி பிரமுகர்களும் வந்துள்ளனர்,

(ஆ)

## மூதறிஞர் செல்வாவுக்கு நடந்தது என்ன?

யாழ்ப்பாணம், வியாழன்

மூதறிஞர் செல்வா நேற்றுக் காலை9 மணியளவில், தெல்லிப் பளையில்உள்ள அவரது இல்லத்தில் காலை உணவு சாப்பிட்ட பின்னர் எழுந்துசெல்லமுயன்ற போது தற்செயலாக கால் தடுக்கி பின்நோக்கி விழுந்ததினல், பின்பக்கத் தலையில் அடி ஏற்பட்டது.

அச்சமயம் குசினியில் வேலையாக இருந்த திருமதி செல்வநாயகம் சத்தம்கேட்டுஓடோடி வந்து அவரை தூக்கியபோது அவர் மயக்கநிலையில் இருந்தார். தலையின் பின்பக்கத்திலும் சிறிது வீக்கம் காணப்பட்டது. அத்துடன் உடலில்இலேசாக காய்ச்சலுமிருந்தது.

உடனடியாக கூட்டுறவுஆஸ்பத்திரி டாக்டர் பொன்னம்பலம் வரவழைக்கப்பட்டார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## பிரதேச சுயாட்சியை குமாரசூரியர் விரும்பவில்லை

### கூட்டணிக் கூட்டத்தில் கம்யூனிஸ்ட் பிரமுகர் வி. பி.

சுழிபுரம், புதன்

பிரதேசசுயாட்சியை உள்ளடக்கிய கம்யூனிஸ்ட்கட்சியின் 5அம்சக்கோரிக்கையைஅமைச்சர் திரு. செ. குமாரசூரியர் விரும்பவில்லை. காங்கேசன் துறை இடைத்தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்வதற்கு முதல்நாள் திரு. சூரியர் எமது ஐந்து அம்சத் திட்டம் பற்றிய தமது வெறுப்பைத் தெரிவித்துக் கொண்டார்.

இவ்வாறு கம்யூனிஸ்ட்கட்சிப் பிரமுகரான திரு. வி. பொன்னம்பலம் தொல்புரத்தில் தமிழர்விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்கள் கலந்து கொண்ட அஞ்சலிக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினர்.

''தமிழ்மக்களின் உரிமைக்காகப் போராடும் தமிழர் விடுதலைக்கூட்டணி நியாயத்துடனும் நேர்மையுடனும் போராடிக் கொண்டிருக்கிறது. இவ்வாறு நேர்மையுடன் போரா

(8-ம் பக்கம் பார்க்க)

## கண்ணதாசன் ஜனதாவில் சேர்ந்தார்

சென்னை, மார்ச் 23

கவிஞர் கண்ணதாசன் காங்கிரஸிலிருந்து விலகி ஜனதா கட்சியில் சேர்ந்துகொண்டார். அனைத்திந்திய அண்ணு திராவிட முன்னேற்றக் கழகத்துடன் காங்கிரஸ் கட்சி தேர்தல் உடன்படிக்கை செய்து கொண்டபோது அதை ஆட்சேபித்த கவிஞர் கண்ணதாசன் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடாமல் ஒதுங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

உ

# திருமணம்

**மணமகன்:**

சுதுமலை மேற்கு, மானிப்பாய்

**ஆ. நமசிவாயம்**

அவர்களின் புதல்வன்

## செல்வன் சண்முகராஜா

[சீமெந்துக் கூட்டுத்தாபனம், புத்தளம்]

**மணமகள்:**

குரும்பசிட்டி, பண்டிதர் வ. நடராஜா அவர்களின் புதல்வி

## செல்வி ஜெயலட்சுமி

இடம்: குரும்பசிட்டி பிள்ளையார் கோவில் மண்டபம்
காலம்: 26 - 3 - 77 சனிக்கிழமை
பகல் 11 மணி 15 நிமி. — 1 மணி 33 நிமி. வரை
உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கிறோம்.

இங்ஙனம்

குரும்பசிட்டி,
தெல்லிப்பழை.
திரு. திருமதி வ. நடராசா,
5712

## ஈட்டு வழக்கில் விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழக்கு இல: M B 11041
1. வேலாயுதர் தம்பர் செல்லையா
கைம்பெண் செல்லம்மா
புளியங்கூடல், ஊர்காவற்றுறை.

வழக்காளி

எதிராக
1. சின்னையா வேலுப்பிள்ளை
மெமோறியல் பள்ளிக்கூடத்தெரு, மானிப்பாய்.

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11041-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1977-ம் ஆண்டு சித்திரை மாதம் 7-ந் திகதி முற்பகல் 10-30 மணிக்கு என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபாய் 12,300/-. இன்னும் ரூபாய் 10,000/- 30-3-72 தொடக்கம் 8-8-72 வரைக்கும் வருடம் ஒன்றுக்கு நூற்றுக்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை வருடம் ஒன்றுக்கு நூற்றுக்கு 5% வட்டியும், கோட்டுச்செலவு ரூபாய் 1031-61 சதம்.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவிற்பற்று மானிப்பாய் இறை "பித்ரவளவும், நிற்காணியும், மற்றும் பிரிவுகளும்" பர. நில. இலா. 6. குளிகள் 9·3 வான்பயிர், கிணறு, வீடு அதன் சொத்துரிமைகளும். இதற்கு எல்லை கிழக்கு றிச்சேட் லோட்டனின் உரிமையாளரினதும், பங்காளரினதும் ஆதனம், வடக்கு சுப்பிரமணியம் காராளபிள்ளையின் உரித்தாளிகளின் ஆதனம், மேற்கு ஒழுங்கை, தெற்கு இராசையா கைம்பெண் மாணிக்கத்தின் ஆதனம். பதிவு இல. B 393/169.

ப. நா. தருமலிங்கம்'
கொமிஷனரும்
விலைமதிப்பாளரும்.

167/1, கோவில் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

5772

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. ஈடு/15117

பொன்னையா நமசிவாயமும்
பெண் இராசம்மாவும் இருவரும் வலந்தலை,
காரைநகர்.

வழக்காளி

எதிராக
செல்லையா சுப்பிரமணியமும் பெண் இரத்தினமும்
இளையதம்பி செல்லையா கைம்பெண்
அன்னலெட்சுமியும்
எல்லோரும் 167/3, டெம்பிள் வீதி, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் மாவட்ட கோட்டின் M B/15117-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1977-ம் ஞு பங்குனி மீ 30 உ புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபாய் 10400/-ம் 25-11-75 தொடக்கம் 7-7-76 வரைக்கும் ரூபாய் 8000/-க்கு 18 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 9 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 669-72.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று திருநெல்வேலி இறை "செல்லப்பா முதலி வளவு" நி. ப. (3) மூன்று வீடும் கிணறும் செய்பயிர் வான்பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கு தம்பிஐயா இரத்தினசபாபதி மகேஸ்வரியினாதனம், வடக்கும் தெற்கும் ஒழுங்கை, மேற்கு வல்லிபுரம் சுப்பையாவின் ஆதனம் இதடங்கலும்.

எஸ்.. சங்கரப்பிள்ளை J. P.
கொமிஷனரும்
விலைமதிப்பாளரும்.

வேல்பதி,
புத்தூர்,
28-2-77.

5770

## துணிவிநியோகத்தில் மோசடியாம்

மாவிட்டபுரம்,புகன்

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க 28ம் இலக்க வீமன்காமம் கிளையில்துணி விநியோகத்தில்பலமோசடிகள் இடம்பெறுவதாக பொதுமக்கள் சங்கநிர்வாகத்திடம் புகார் தெரிவித்துள்ளனர்.

இங்கு பொதுமக்களுக்கு வழங்கப்படும் துணிகளில் ஒரு அங்குலம் முதல்ஆறுஅங்குலம் வரை ஒவ்வொன்றிலும் குறைவாக இருப்பதுடன்' துணிகளைக் கோணல் மாணலாக வெட்டிக் கொடுப்பதால் அத்துணிகளில் உடைகள் தைக்க முடியாதிருப்பதாகவும் பொதுமக்கள்புகார் கூறுகின்றனர்.

கூத்தியவத்தை கிராமமுன்னேற்றச்சங்கம் இதுகுறித்து உயர் அதிகாரிகளுக்கு மகஜர் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளது. (அ)

## பிஸ்கால் விற்பனை

### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

யோக்கிம் அலக்ஸ்சாண்டர்
செல்வநாயகம்,
17/4, வீச் றேட், குருநகர்,
யாழ்ப்பாணம்.

வழக்கு இலக்கம். காசு/3683
வழக்காளி.

எதிர்
குருசு லோறன்ஸ்
அல்லது யேசு.
சின்னக்கடை கிழக்கு, குருநகர்
யாழ்ப்பாணம்.
எதிராளி.

மேற்சொல்லப்பட்ட எதிராளியிடமிருந்து ரூபா 4791/-ம் 19-10-1969 தொடக்கம் கடன் இறுக்கும் வரைக்கும் சட்டவட்டியும் அதில் ரூபா 900/-ஐக் கழித்து மிகுதிப்பணமும் கோட்டுச்செலவு ரூபா 1343/70 சதமும், பிஸ்கால் செலவும் பவுண்டேச்சும் அறவாக்குவதற்காக கீழே விபரிக்கப்படும் ஆதனத்தின் உரித்துக்களை 1977-ம் ஆண்டு சித்திரை மாதம் 20-ம் திகதி புதன் கிழமை காலை 10-00 மணிக்கு சொல்லப்பட்ட ஆதனத்தில் இருந்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம், டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று, கரையூர்இறை, 'நீலன் குடியிருப்பு' உறுதிகளின்படியும் நெடுங்கால ஆட்சிப் படியும் குளி ஒன்பதே முக்கால் (9, 3/4) ஆனல் அளவின்படி குளி எட்டரையும் ($8\frac{1}{2}$) புதிதாகக் கட்டிய கல்வீடும், அதற்குச் சேர்ந்தவைகளும், குறித்த குளி எட்டரைக்கும் எல்லைகள்.

கிழக்கு: சிமியான் பிலிப்புவுக்கும் பெண் அந்தோனியாப் பிள்ளைக்குரியாதனம்.

வடக்கு: ஒழுங்கை.
மேற்கு: றோட்டு.
தெற்கு: யோண் பெஞ்சமினுக்குரியாதனம். இதனடங்கலும்.

மு. பத்மநாதன்,
பிஸ்கால்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.
16-3-1977. 5771

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# சிறுவிளம்பரம்

### தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு பிரபல ஸ்தாபனத்துக்கு பைப்புகள் இணைக்கவும், பழுது பார்க்கவும் யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் இத்துறையில் பயிற்றப்பட்டு சித்தியடைந்த, நல்ல அனுபவம் வாய்ந்த ஒருவர் உடன் தேவை. எவ்வளவு காலம் இத்துறையில் அனுபவம் என்பதையும் நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 5763, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 5763

றோயல் டிஸ்பென்சறிக்கு ஆங்கில அறிவுள்ள பெண் உதவியாளர் உடன் தேவை. நேரில் வரவும் ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம். 5765

பலவிதமான சோப் வகைகள் செய்வதில் அனுபவம் நிறைந்த ஆள் தேவை. விண்ணப்பிக்கவும். சி.பாலசிங்கம், பிள்ளையார் வேன், திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம். 5774

### விற்பனைக்கு

பரமாத்மஜோதி வெளியீடுகள் ஸ்ரீ நீலகண்டதாதாஜி, சாயிபாபா பகவான்களின் தெய்வீக மகிமைகளும் அஷ்டமாசித்திகளும், அற்புதங்களும். பேராசிரியர் -பரமாத்மஜோதி காங்கேசன்துறை. 5764

### கல்வி

G C E A/L விலங்கியல் வகுப்பு உடன் ஆரம்பமாகும். விபரங்களுக்கு பிரான்சிஸ் கில்னர் மண்டபம் காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். 5767

### கல்வி

G. C. E. A/L விஞ்ஞான பாடங்கள் N.C.G.E. விஞ்ஞானம் கணிதம் H.N.C.E. விஞ்ஞானம், கணிதம் வர்த்தகவியல், ஆங்கிலம், பேச்சு ஆங்கிலம்– சிறந்த பட்டதாரி ஆசிரியர்களால் கற்பிக்கப்படும். இடம்: கில்னர் மண்டபம், காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தினம் 4- 6 மணிக்கு அல்லது ஞாயிறு 10 மணிக்கு பதிவு செய்யவும். 5766

### கல்வி

1977 ஆவணியில் பரீட்சை எடுக்கவுள்ள H. N. C. E. வகுப்பு மாணவர் கணிதம், பௌதிகம், இரசாயனம், உயிரியல் பாடங்களும், O/L வகுப்பார் எண் கணிதமும் சிறந்த ஆசிரியர்களிடம் கற்க ஒழுங்கு செய்து தரப்படும். தொடர்பு கொள்க. சி. தயானந்தசிவம், சிவாகல்வி நிலையம், உபதபாற் கந்தோர் இல்லம், நீராவியடி. 5759

### காணவில்லை

உடுவில் கே. பாலசிங்கம் வீட்டில் வசித்து வந்தபையன் கோவிந்தராசன் வயது பன்னிரண்டு, உயரம் 3 அடி சிவப்பு நிறம், 23- 12- 76 முதல் காணவில்லை. இவரைப் பற்றிய தகவல் தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். கிட்டிய பொலிஸ் நிலையத்தில் அல்லது எஸ். பெருமாள் புடும்புத் தோட்டம் பத்தனை முகவரிக்கு தெரிவிக்கவும். 5775

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

அராலிவடக்கிலிருந்து தற்காலம்வட்டுக்கோட்டை கிழக்கு சித்தன்கேணி, ஆறுமுகம் கணபதியார் கந்தையா

வாதி

இல: ஈடு/358

எதிராக
வட்டுக்கோட்டை மேற்கு, வட்டுக்கோட்டை.
1. கிருஷ்ணர் தர்மலிங்கமும் பெண்
2. இராசம்மாவும்
3. முருகுப்பிள்ளை சுப்பிரமணியம் வீரசிங்கமும்

பிரதிவாதிகள்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தின் M B/358-ம் இலக்க வழக்கில் எனக்கு கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணிகளை 1977-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11-ந் திகதி (11-4-1977) திங்கட்கிழமை 10 மணியளவில் அந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபா 8666/66ம் 4-10-1974 தொடக்கம் 4-4-1975 வரைக்கும் ரூபா 8000/-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 602/74இதில் ஒரு பகுதியாக ரூபா 150/- கொடுக்கப்பட்டிருப்பதாலும்.

### ஆதன விபரங்கள்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் மேற்கு வட்டுக்கோட்டை கோவிற்பற்று வட்டுக்கோட்டை மேற்கு இறை வீராவொல்லை நில பர. இரண்டும் குழி ஒன்றரையும் வீடும் வான்பயிர் செய்பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கு கையொழுங்கை வடக்கு வேலு அமிர்தலிங்கத்துக்கும் பங்காளருக்குமுரியவாதனம், மேற்கு வீரபத்திரசுவாமி கோவிலுக்குரியவாதனம், தெற்கு இராமசாமி பெண் அன்னமுத்தவுக்குரியவாதனம். இந்தெல்லைப்படி இதடங்கலும். தெற்கெல்லைக்காணியின் தெற்குப் பக்கத்திலிருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும். தூர்வை வழிவாய்க்காலும்.

2. டி இறை வெப்பட்டியன் ஒல்லை நில. பர. மூன்றரை. இதில் வடக்குப் பக்கமாக நில. பர. ஒன்றும்குழி பதின்மூன்றரையும் கிணற்றில் பங்கும் வான்பயிர் செய்பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கு முருகர் செல்லத்துரைக்கும் பெண் கண்மணிக்கும் மறுபேருக்குமுரியவாதனங்கள் வடக்கும் மேற்கும் தன்னிலத்தில் கையொழுங்கை தெற்கு முருகுப்பிள்ளை சதாசிவத்திற்குரியவாதனம் இந்தெல்லைப்படி இதடங்கலும் இதை சேர்ந்தவைகள் அனைத்தும்.

க. சிவஸ்கந்தா,
நீதிமன்ற விற்பனை
ஆணையாளரும்,
மதிப்பாளரும்.

நாகேந்திரமடம்,
வட்டுக்கோட்டை,
10-03-77.

5773

## ஜனதா ஜன.காங். - கூட்டணிக்கு 349 மொத்த ஸ்தானங்கள்

### காங்கிரஸ்-அ.அ.தி.மு.க.-கம்யூ அணிக்கு 181

புதுடில்லி மார்ச் 23

இந்திய லோகசபையில் ஜனதா கட்சிக்கும் அதன் தோழமைக் கட்சிகளுக்கும் அறுதிப் பெரும்பான்மைப் பலம் கிடைத்துள்ளது.

542 தொகுதிகளைக் கொண்ட லோகசபையில் ஜனதா கட்சியும் அதன் தோழமைக் கட்சிகளான ஜனநாயக காங்கிரஸ். மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன 349 தொகுதிகளைக் கைப்பற்றியுள்ளன.

காங்கிரஸ் கட்சிக்கும் அதன் தோழமைக் கட்சிகளுக்கும் 181 தொகுதிகள் கிடைத்துள்ளன.

542 தொகுதிகளில் 539 தொகுதிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

மீதியாயுள்ள மூன்று தொகுதிகளில் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் உள்ள 'லடாக்' தொகுதியிலும் ஹிமாலய பிரதேசத்தில் மண்டி தொகுதியிலும் உறைபனி காரணமாக ஜூனில் வாக்களிப்பு நடைபெறும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

**வன்முறையால் மீண்டும் வாக்கெடுப்பு**

கடந்த புதன்கிழமை பஞ்சாப் மாநிலத்தில் உள்ள சிரில் பூர் தொகுதியில் வாக்கெடுப்பு நடைபெற்றபோதிலும் வாக்குக்களை எண்ணும்போது ஏற்பட்ட வன்முறைச்சம்பவங்களை அடுத்து அந்த வாக்களிப்பு தேர்தல் கமிஷனரால் ரத்துச்செய்யப்பட்டுள்ளது.

திரு. மொரார்ஜி தேசாயைத் தலைவராகக்கொண்ட ஜனதா கட்சி 270 தொகுதிகளையும், திரு. ஜெகஜீவன் ராமைத் தலைவராகக்கொண்ட ஜனநாயக காங்கிரஸுக்கு 27 தொகுதிகளும் மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சிக்கு 22 தொகுதிகளும் அகாலி தளம்கட்சிக்கு 8 தொகுதிகளும் தி. மு. க. வுக்கு ஒரு தொகுதியும் கிடைத்துள்ளன. சில சுயேட்சை உறுப்பினர்களும் வேறு சில

(5-ம் பக்கம் பார்க்க)

## ஜனதாவின் 4 கட்சிகளும் விரைவில் ஒன்றுகிவிடும்

### பொதுக்காரியதரிசி நம்பிக்கை

புதுடில்லி, மார்ச் 23

ஜனதா கட்சியில் அங்கம் வகிக்குப் நான்கு கட்சிகளும் விரைவில் ஒரேகட்சி அமைப்பாகிவிடும் என்று ஜனதா கட்சிப் பொதுச்செயலாளர் திரு. கே. எல். அட்வாணி தெரிவித்துளளார்.

ஜனதா கட்சியில் அங்கம் வகிக்கும் பாரதியலோர் தக்தள், சோஷலிஸ்ட் ஆகிய இருகட்சிகளும் இணைப்புக்கான சகல ஏற்பாடுகளையும் பூர்த்தியாக்கிவிட்டன என்றும் ஸ்தாபன காங்கிரஸும் ஜனசங்கும் அடுத்தமாத இறுதியில் அல்லது மேமாத முற்பகுதியில் இணைவதற்கான ஏற்பாடுகளைச்செய்து முடித்துவிடும் என்றும் மேமாதத்தில் நான்கு கட்சிகள் என்ற பெயருக்கே இடமிருக்காது என்றும் திரு அட்வாணி தெரிவித்துள்ளார்.

**சாந்திபூஷண் தலைமையில் குழு**

இதேவேளையில் ஜனதா கட்சியின் கொள்கை அமைப்பை உருவாக்க பிரபல வழக்கறிஞர் திரு. சாந்திபூஷண் தலைமையில் விசேடகுழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. (இ)

## இந்தியமக்களுக்கு

### ஜிம்மிகார்ட்டர் பாராட்டு

புதுடில்லி, மார்ச் 23

இந்திய மக்கள் தமது தலைமையைத் தெரிவு செய்வதில் முறையான ஜனநாயக வழிமுறைகளைக் கைப்பற்றியுள்ளமை பாராட்டுக்குரியது.

இந்திய தேர்தல் முடிவுகள் குறித்து அபிப்பிராயம் வெளியிட்ட அமெரிக்க அதிபர்

(5-ம் பக்கம் பார்க்க)

## ஜோர்ஜ் பெர்னுண்டஸ் விடுதலை!

புதுடில்லி, மார்ச் 23

அரசாங்கத்தைக் கவிழ்க்கச்சதிசெய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு சிறைவாசம் அனுபவித்துக்கொண்டே தேர்தலில் போட்டியிட்டு அமோக வெற்றியீட்டிய சோஷலிஸ்ட்கட்சித் தலைவர் திரு. ஜோர்ஜ் பெர்னுண்டஸ் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

முசாபர்பூர் தொகுதியில் ஜனதா கட்சி சார்பில் போட்டியிட்டு தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரஸ் அபேட்சகரை 3 லட்சத்து 34 ஆயிரம் மேலதிகவாக்குகளால் வெற்றிபெற்ற இவர் விடுதலையாகி புதுடில்லியில்ஜனதா கட்சி தலைமைக்காரியாலயத்துக்குச் சென்றபோது உற்சாகமான வரவேற்பளிக்கப்பட்டது.

கட்சித்தலைமைக்காரியாலயத்திற்கு உள்ளேயும் வெளியேயும் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடிநின்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

திரு. பெர்னுண்ட்டஸ் பிணையிலேயே விடுவிக்கப்பட்டார்.

திரு பெர்னுண்ட்டஸுக்கு கிடைத்த மேலதிக வாக்குகளே இத்தேர்தலில் கிடைத்த இரண்டாவது ஆகக்கூடுதலான மேலதிகமான வாக்குகளாகும். (இ)

## கோபாலன் மறைவுக்கு ஜனதாகட்சி அனுதாபம்

புதுடில்லி, மார்ச் 23

''அனுபவம்வாய்ந்தஅரசியல் மேதையை பாட்டாளி வர்க்கத்தின் அரும்பெரும் தலைவனை இந்தியா இழந்துவிட்டது''

இவ்வாறு மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. ஏ. கே. கோபாலனின் மறைவுகுறித்து ஜனதா கட்சி வெளியிட்டுள்ள இரங்கற் செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

அன்னுருக்கு அஞ்சலி செலுத்தும்வகையில் வேலூரில் ஜனதா கட்சியினர் மௌன ஊர்வலம் ஒன்றையும் நடத்தினர்.

**இந்திராவின் இரங்கல்**

திரு. கோபாலனின் மறைவு

(5-ம் பக்கம் பார்க்க)

## தேசிய சர்வதேச நெருக்கடிகளை இந்திரா சாதுரியமாக முறியடித்தார்

### முன்னாள் அமைச்சரவை பாராட்டு

புதுடில்லி, மார்ச் 23

''1971—72-ம் ஆண்டுக் காலப்பகுதியில் இந்தியாவுக்கு ஏற்பட்ட உள்நாட்டு-சர்வதேச நெருக்கடிகளை சாதுரியமாக முறியடித்த பெருமை பிரதமர் திருமதி இந்திரா காந்தியையே சாரும்''

இவ்வாறு இந்திய முன்னாள் மந்திரி சபை நேற்று நிறைவேற்றியுள்ள தீர்மானம் ஒன்றில் தெரிவித்துள்ளது.

கடந்த பத்தாண்டுகள் சிறப்புடன் பணியாற்றிய திருமதி காந்தியைப் பாராட்டும் தீர்மானம் ஒன்று முன்னாள் மந்திரிசபை ராஜினாமாச் செய்யுமுன்னர் நேற்று இறுதியாகக் கூடியபோது நிறைவேற்றப்பட்டது.

திருமதி காந்தி தமது பதவிக்காலத்தில் நாட்டின் பொருளாதார அரசியல்நெருக்கடிகளைத் தீர்க்க மேற்கொண்ட முயற்சிகளையும் அமைச்சரவை பாராட்டியுள்ளது.

திருமதி காந்தியின் ஆட்சிக்காலத்தில் ஜனநாயகமதசார்பற்ற சோஷலிஸஆட்சிக்கான அடித்தளங்கள் உருவாக்கப்பட்டன என்றும் அந்தப் பாராட்டுத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டுக்கு மேலும் பல ஆண்டுகள் சேவையாற்ற வேண்டும் என்றும் திருமதி காந்தியை அமைச்சரவை கேட்டுக்கொண்டது. (இ)

## காங்கிரஸ் பொறுப்பான எதிர்க்கட்சியாக இருக்கும்

புதுடில்லி, மார்ச் 23

காங்கிரஸ் கட்சி மக்களின் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்காகப் பாடுபடும் பொறுப்பான எதிர்க்கட்சியாக இயங்கிவரும் என்று காங்கிரஸ் கட்சியின் காரியக்கமிட்டிதெரிவித்துள்ளது.

தேர்தலில் காங்கிரஸ் கட்சி தோல்வியுற்ற பின்னர் இக்கமிட்டி நேற்று முதல்தடவையாகக் கூடியது. எதிர்க்கட்சியில் இருந்தபோதிலும் மக்களுக்குச் சேவையாற்றுவதே காங்கிரஸின் நோக்கமாக இருக்கும். இந்த நோக்கத்தை நாம் என்றுமேகைவிடமாட்டோம் என்றும் இக்கமிட்டி தெரிவித்துள்ளது.

திருமதிஇந்திராவின் கடந்த10 ஆண்டு கால சேவைக்கும் கமிட்டியில் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது. (இ)

### ''பிரதமர் பதவியை ஏற்பீர்களா?''

## எந்தப் பொறுப்புகளையும்நான் இதுவரைதட்டிக்கழித்ததில்லை

### ஜன. காங். தலைவர் ஜெகஜீவன் பதில்



புதுடில்லி, மார்ச் 23

தமது வாழ்க்கையில் தாம் இதுவரை தமக்களிக்கப்பட்ட எந்தப் பொறுப்பையும் தட்டிக் கழித்ததில்லை என்று ஜனநாயகக் காங்கிரஸ் தலைவர்திரு.ஜெகஜீவன் புதுடில்லியில் தெரிவித்தார்.

பிரதமர்பதவி வழங்கப்பட்டால் ஏற்றுக்கொள்வீர்களா என்று பத்திரிகை நிருபர்கள் கேட்டபோதே திரு. ஜெகஜீவன் மேற்கண்டவாறு கூறினர்.

இந்தியப் பிரதமர் தெரிவு குறித்தும் ஜனதா—ஜனநாயக காங்கிரஸ் கட்சிகளின் இணைப்புக்குறித்தும் ஜனதா கட்சித் தலைவர்களுடன் பேச்சு நடாத்துவதற்காக புதுடில்லி வந்தபோதே திரு. ஜெகஜீவன்ராம் மேற்கண்ட கருத்தைத் தெரிவித்தார்.

பிரதமர்பதவியை யாருக்கு வழங்குவது என்பது குறித்து தாம் இதுவரை ஜனதா கட்சியினருடன் பேச்சு நடத்தவில்லை என்றும் திரு. ஜெகஜீவன்ராம் தெரிவித்தார்.

ஜனதா—ஜனநாயக காங்கிரஸ் கட்சிகளுக்கிடையே ஜனநாயகமுறைப்படி வாக்கெடுப்பு மூலம் பிரதம மந்திரி தெரிவு செய்யப்படவேண்டும் என்று திரு. ஜெகஜீவன்ராம் ஏற்கனவே கூறியிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

### காங்கிரஸை விரும்பாத மாநிலங்களில் தேர்தல்

காங்கிரஸை விரும்பாத மாநிலங்களில் அதாவது தேர்தலில் காங்கிரஸ்கட்சிக்கு எதிராக பெரும்பாலானோர் வாக்களித்த மாநிலங்களில் விரைவில் சட்டசபை தேர்தல் நடத்தவேண்டும் என்றும் திரு. ஜெகஜீவன்ராம் தெரிவித்தார்.

இதேகருத்தை சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாசர் ஏற்கனவே தெரிவித்திருந்தார். (இ)

## சுகாதார அமைச்சர் வெற்றி

புதுடில்லி, மார்ச் 23

மத்தியசுற்றுலாசுகாதாரஅமைச்சர் டாக்டர் கரண்சிங்ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் உத்தம் பூர் தொகுதியில் வெற்றிபெற்றுள்ளார்.

இவரை எதிர்த்துப்போட்டியிட்ட ஜனதா கட்சியைச் சேர்ந்த ஓம்பிரகாஷை இவர் 55 ஆயிரம் வாக்குகளால் தோற்கடித்தார். இத்தொகுதியில் முனைப்போட்டி இருந்தது.

**இவர்களும் வெற்றி**

ஜனதா கட்சித் தலைவர்களில் ஒருவரான சந்திரசேகர் வாரணசி தொகுதியில்வெற்றி பெற்றுள்ளார்.

ஜனதா கட்சியின் துணைத் தலைவர் திரு. சரண்சிங்கும் வெற்றிபெற்றுள்ளார். (இ)

### மணிவாக்கு

எப்பொழுதுமே இதயத்தைப் பேணி வளர் இதயத்தின் மூலம் பேசுவது தெய்வம்; புத்தியின் மூலம் பேசுவது நீயேயாம்!

— சுவாமி விவேகானந்தர்.

ஈழநாடு
THE EELANADU

## தமிழ்நாட்டின் பதில்!

இந்தியாவின் ஆட்சி மன்றத்துக்கு நடந்த ஆருவது பொதுத் தேர்தலில் 'தமிழ்நாடு' அளித்த தீர்ப்பு பற்றி ஆராய்வது பயனுள்ளது.

இந்திய ஆட்சி மன்றத்துக்கு தமிழ்நாடு முப்பத்தொன்பது பிரதிநிதிகளைத் தெரிவுசெய்து அனுப்ப வேண்டும்.

காங்கிரஸ், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மாஸ்கோ சார்பு) ஆகிய கட்சிகள் தங்களுக்குள் உடன்படிக்கை செய்து தொகுதிகளைப் பங்கிட்டுக் கொண்டன.

இதேபோன்றுதிராவிட முன்னேற்றக் கழகம் ஜனதா கட்சியுடனும் இந்திய மார்க்ஸிஸ்ட் கட்சியுடனும் தேர்தல் தொகுதி உடன்பாடு செய்துகொண்டது.

பாண்டிச்சேரியிலுள்ள ஒரு தொகுதி உட்பட இரு தரப்பினரும் நாற்பது தொகுதிகளிலும் வேட்பாளர்களை நிறுத்தினர்.

இருபத்தியொரு தொகுதிகளில் வேட்பாளர்களை நிறுத்திய அனைத்திந்திய அண்ணாதிராவிட முன்னேற்றக்கழகம் பத்தொன்பது தொகுதிகளிலும் பதினைந்து தொகுதிகளில் போட்டியிட்ட காங்கிரஸ் பதினுன்கு தொகுதிகளிலும் வெற்றியீட்டின. நான்கு தொகுதிகளில் போட்டியிட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மூன்று இடங்களில் வெற்றி பெற்றது.

பத்தொன்பது தொகுதிகளில் நின்ற தி. மு. கழகம் ஒரேயொரு தொகுதியில்தான் வெற்றிபெற முடிந்தது. ஜனதாகட்சி பத்தொன்பதில் மூன்று இடத்தைப் பெற்றது. இரண்டு இடங்களில் போட்டியிட்ட மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஒன்றுகூடக் கிடைக்கவில்லை

சென்ற பொதுத்தேர்தலிலும் மாநில சட்டசபைத் தேர்தலிலும் செல்வாக்குப் பெற்றிருந்த திராவிட முன்னேற்றக் கழகம் இந்தப் பொதுத்தேர்தலில் செல்லாக்காசாகிப் போய்விட்டது.

கழகத்துக்குள் பிளவுகள் ஏற்பட்டுப் பிரிந்ததும் ஊழல் புகார்களும் லஞ்சப் புகார்களும் கிளம்பின. இதன் விளைவாக கழக ஆட்சியை நீக்கி விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட்டு விசாரணையும் நடைபெற்றது. தேர்தலுக்குத் தேதி நிர்ணயிக்கப்பட்ட பின் விசாரணை செய்த சர்க்காரியா கமிஷனின் அறிக்கையின் சில பகுதிகள் வெளியிடப்பட்டன. சில குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கை தெரிவித்தது.

கழகத்தின் வீழ்ச்சிக்கு இந்த அறிக்கை தேர்தல் சமயத்தில் வெளியிடப்பட்டதும் ஒரு காரணம்.

திரு. கருணாநிதி மீதோ மற்றும் கழக அமைச்சர்கள் மீதோ சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் இன்னும் நீதிமன்றத்தில் நிரூபிக்கப் படவில்லை. இந்தக் குற்றச்சாட்டுக்கள் யாவும் ஆதாரமற்றவை என்று நிராகரிக்கப்படவும்கூடும்.

ஆனாலும் ஆட்சிபீடத்திலிருப்பவர்கள், மக்கள் தலைவர்கள் சந்தேகத்துக்கே இடமில்லாத வகையில்பணி புரியவேண்டும். சிறிதளவு சந்தேகத்துக்கு இடம் வைத்தாலும் மக்கள் அவர்களை நிராகரித்துவிடுவார்கள்.

இந்தச் சந்தேகமும் கழகத்தின் வீழ்ச்சிக்கு ஒரு காரணமாகும்.

காங்கிரஸும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் தேர்தல் உடன்பாடு செய்து கூட்டாகப்பிரசாரம் செய்தன.

திரையில் நடிகர்களைப் பார்த்தே அடிபிடிப்படும் ரசிகத்தன்மை தமிழ்நாட்டில் மட்டுமல்ல தமிழர்கள் மத்தியிலேயே மலிந்துள்ள துரதிர்ஷ்டம் இன்று ஏற்பட்டுள்ளது.

ஒன்று சேராதஇருபெரும் கவர்ச்சி நடிகர்கள் ஒரே மேடையில்தோன்றிஆதரவு திரட்டினல்'ரசிகத்தன்மை' நிறைந்த மக்களின் ஆதரவு அவர்கள் பக்கம்தானே பெருகும்!

வேறெந்த மாநிலத்திலுமில்லாதவாறு தமிழ் நாட்டில் ஒவ்வொரு தொகுதியிலும் பழுதடைந்த வாக்குகளின் எண்ணிக்கை மிக அதிகம் இதன் அர்த்தம் என்ன?

திரு. மொரார்ஜிதேசாய் முன்னர் அமைச்சராகவும் துணைப் பிரதமராகவும் இருந்தபோது இந்தி வெறியராகத் தமிழ்நாட்டில் கருதப்பட்டவர். தங்க நகைகள் அணிவது தமிழ்நாடு உட்படத் தென்னுட்டில் தான் அதிகம். திரு. மொரார்ஜி நிதி அமைச்சராக இருந்தபோது தங்கக் கட்டுப்பாட்டைக் கொண்டு வந்தவர். இந்தியும் தங்கக் கட்டுப்பாடும் தமிழ்நாடு உட்பட . தென்னுட்டில் மொரார்ஜிக்கு எதிர்ப்பைத் தேடிக்கொடுத்திருந்தது.

தி. மு. கழகம் தமிழ்நாட்டில் வீழ்ச்சியடையவும் தென்னுட்டில் ஜனதாக் கட்சி செல்வாக்குப் பெற முடியாமல் போனதும் மொரார்ஜி ஒருகாரணமாக இருக்கலாம்.

எப்படியாஞலும் தி. மு. கழகத்தைப் பொறுத்த வரையில் ''வளர்த்தகடா மார்பில் பாய்ந்த கதை'' தான்!

## ரூபா 62,000 ஒதுக்கீடு

பண்டத்தரிப்பு, புதன் உடுவில் தொகுதிப்பிரதேச அபிவிருத்திச் சபையின் இவ்வாண்டிற்கான அபிவிருத்தி திட்டங்களுக்கான முதலீடு செய்யு முகமாகத் திட்டமிடல் பொருளாதார அமைச்சு ரூபா 62 ஆயிரத்தை ஒதுக்கியுள்ளது. (அ)

## இன்று

வண்ணை சிவன் கோயிலில் 9ந்திருவிழாவாகிய இன்று பகல் திருவிழா 6 மணிக்கும் மாலை6மணி முதல் 7.30 மணிவரை ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிகஞானசம்பந்தபரமாசாரிய சுவாமிகள் அவர்களின் 'திருவிளையாடல்' விரிவுரைத்தொடரும் 7.30 மணிக்குவசந்தமண்டபப்பூசையும் சுவாமி கைலாசபர்வதத்தில் வீதிவலம் வருதலும் திகழும்.

# 4-ம் 5-ம் தர அதிபர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள்

ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில், ஆட்சியாளரின் மொழியைப் பயிற்றும் ஆசிரியர்கள், ஆளப்படும் மக்களின் மொழியைப் பயிற்றும் ஆசிரியர்கள் என ஆசிரியர்கள் இரு வகுப்புகளாக வகுக்கப்பட்டு, ஆளுவோரின் மொழியைப் பயிற்றியோருக்கு அதிக சம்பளமும், ஆளப்படுவோரின் மொழியைப் பயிற்றிய ஆசிரியர்களுக்கு அதிக சம்பளமும். ஆளப்படுவோரின் மொழியைப் பயிற்றிய ஆசிரியர்களுக்கு மிகக் குறைந்த வேதனமும் வழங்கப்பட்டுவந்தது.

### ஆசிரியருக்குக் கடிதம்

ஆங்கிலேயரின் ஆட்சி ஒழிந்தது. சுதந்திரம் கிடைத்தது. இந்த அரசியல் மாற்றத்திற்கேற்ப ஆசிரியர்களின் சம்பள விகிதத்தில் மாற்றம் ஏற்படவில்லை. இலவசக் கல்வித்திட்டம் புகுத்தப்பட்ட காலத்திலிருந்து காலத்துக்குக்காலம் படிப்படியாகப் பல்கலைக்கழகம் வரை போதனமொழி தன் மொழியாக மாற்றப்பட்டது. இந்த மாற்றம் ஏற்பட்டபோதிலும் ஆசிரியர்களின் சம்பளத்திட்டத்தில் எதுவித மாற்றமும் ஏற்படவில்லை. மாற்றத்தை ஏற்படுத்துவதற்குப் பதிலாக, ஏற்றத்தாழ்வான சம்பளத்தை வழங்குவதற்கு மாற்றுவழி புகுத்தப்பட்டது. சிறப்புப்பயிற்சி பெற்றோர், பொதுப்பயிற்சி பெற்றோர் என ஆசிரியர் சமுதாயம் பகுக்கப்பட்டது. இதை எதிர்த்துக் கால்நூற்றுண்டு காலமாக எமது மூத்த தலைவர்கள் குரலெழுப்பி வந்தார்கள்.

எல். பி. டி. சில்வா சம்பள விசாரணைக் குழு தனது விதப்புரையின் மூலம் சமசம்பளம் வழங்குவதாகக் காட்டி, 610 ரூபாவை மாதாந்த உச்சச் சம்பளமாகப் பெற்றுவந்த சிறப்புப் பயிற்சிபெற்ற ஆசிரியர்களின் சம்பளத்தை 550 ரூபாவாகக் குறைத்து, மாதாந்த உச்சப்படியாக 466 ரூபாவைப் பெற்ற பொதுப்பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் உச்சப்படியை 550 ரூபாவாகக் கூட்டியது. இந்த ஏற்கப்படாத மாற்றங்கள் கூட ஏட்டளவில் ஏற்பட்டதேதவிர நடைமுறையில் ஏற்படவில்லை. இச் சம்பளத் திட்டமும் உதவியாசிரியர்களைப் பொறுத்தவரையில் 1974 ஜனவரியில் இருந்து அமுல்செய்யப்பட்டது. அதிபர்களைப் பொறுத்தவரையில் 1975 ஏப்ரல் மாதத்திலிருந்தே அமுல்செய்யப்படுகின்றது. 5-ம் தர அதிபர்களின் உச்சப்படியும் உதவியாசிரியர்களின் உச்சப்படியும் ஒரேஅளவாக இருந்ததால் நடைமுறைப்படுத்தப்பட்ட காலமாற்றத்தைப் பொறுத்து 5ஆம்தர அதிபர்கள் ஏறக்குறைய தமதுஒருசம்பளஉயர்ச்சியை இழந்தார்கள். இந்த அதிபர்கள் உதவியாசிரியர்களாகஎதுவிதபொறுப்புமின்றி இருந்திருந்தால் எந்தநட்டமும் அடைந்திருக்க மாட்டார்கள். 4ஆம்தரஅதிபர்களைப்பொறுத்தவரையில் அவர்களும் தமது ஒரு சம்பள உயர்வை இழந்திருக்கிறார்கள். சம்பள விசாரணைக்குழு4ஆந்தரஅதிபர்களின் உச்சப்படிச் சம்பளத்தை மாதம் 610 ரூபாவாக விதந்துரைத்தபோதிலும், அது ஏட்டளவில் ஏற்பட்ட மாற்றமேதான். 30 ஆண்டுகளுக்குமேல் சேவை செய்த 4ஆந்தரஅதிபர்கள்சம்பளவிசாரணைக்குழுவின்

ரி புரையின்படி உதவியாசிரியரின் உச்சப்படியான 550 ரூபாசம்பளத்தைக்கூடப்பெறுமலே இளைப்பாறுகிறுர்கள். இந்த நிலை மாற்றியமைக்கப்படவேண்டுமானுல் சேவைக் கால அடிப்படையில் சம்பள உயர்வுவழங்கப்படவேண்டும்.

இதன்பின் 1966 மே மாதத்தில் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் அனைவருக்கும் சமசம்பளம் வழங்குவதாக கௌரவ கல்வியமைச்சர் அறிவித்தார்.அதன்படி உதவியாசிரியரின் மாதாந்த உச்சப்படி 625 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.அதே வேளையில் 4ஆம் 5ஆம்தர அதிபர்களின் சம்பள விகிதத்தில் எதுவித மாற்றமும் செய்யப் படவில்லை. 4ஆம்தர அதிபரின் மாதாந்த உச்சப்படி 610ரூபாவாகவும், 5ஆம்தர அதிபரின் மாதாந்த உச்சப்படி 550 ரூபாவாகவுமே இருக்கிறது. இதனுல் இவர்கள் ஏட்டளவில்கூடத் தமக்கென ஒரு சம்பளத்திட்டமின்றி உதவியாசிரியர்களிலும் குறைந்த சம்பளத் திட்டத்தில் வைக்கப்பட்டிருக்கிறுர்கள்.

4ஆம்5ஆம்தரஅதிபர்களுக்கு தலைமையாசிரியர் என்ற பெயருக்குப் பதிலாக அதிபர்கள் என்னும் பெயர் அறிவிக்கப் பட்டிருக்கிறதேதவிர, அதிகாரத்தையும் பொறுப்பையும் பொறுத்தவரையில், எமக்கு மற்றைய தரங்களைச் சேர்ந்த அதிபர்களுக்குரிய உரிமைகள் எதுவுமே இல்லை. கோடீஸ்வரன் என்னும் பெயரோடு தெருத்தெருவாகப் பிச்சை எடுக்கும் பிச்சைக்காரச்சிறுவனின் நிலையில் நாம் இருக்கிறோம். இந்நிலையை மாற்றியமைக்கவேண்டியது எமது கடமை மாத்திரமல்ல, எதிர்காலத்தில் எமதுதர அதிபர்களாக வரவிருப்போரது கடமையுமாகும். இந்நிலை மாற்றியமைக்கப்படாவிட்டால் எதிர்காலத்தில் யாருமே இத்தரங்களைச் சேர்ந்த அதிபர் பதவிகளுக்கு விண்ணப்பிக்கக்கூட மாட்டார்கள்.

பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்குச் சமசம்பளம் வழங்குவது என்றமுடிவுஎடுக்கப்பட்டபின், அதிபர் தரத்தில் உள்ளவர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஆகக்குறைந்த சம்பளத் திட்டம் என்ன? அவர்கள் நியமிக்கப்பட வேண்டிய ஆகக் குறைந்த தரம் எது? என்னும் விஞக்களுக்கு விடை காணுவதில் எவருக்குமே ஐயமிருக்க நியாயமில்லை. பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் அனைவருக்கும் சமசம்பளம் வழங்குவதென்ற அறிவிப்புக்குமுன், சிறப்புப் பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் எந்தத்தர அதிபர் பதவிக்கு நியமிக்கப்பட்டார்கள்? அவர்களுக்கு வழங்கப்பட்ட சம்பள விகிதம் என்ன?என்னும்விஞக்களுக்கு கிடைக்கும் விடையே இப்பந்தியில் ஆரம்பத்தில் எழுப்பப்பட்ட விஞக்களுக்குரிய விடைகளாகும்.

தற்காலிகமாக எமக்குக் கிடைக்கவேண்டியதிலும் பார்க்கக் குறைந்தது எதையாவது நாம் ஏற்பதா? அல்லது எமக்குக் கிடைக்கவேண்டியதைக் கிடைக்கச்செய்வதற்காக நாம் ஒன்றுதிரண்டு பல்வேறு ஆசிரியர் தொழிற்சங்கங்களினதும் உதவியுடன்ஏதாவது செய்வதா? அல்லது கைகட்டி வாய்பொத்தி இருப்பதா என்பதைத் தீர்மானிப்பதற்காகவே நாம் 1977–03–27 ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் நாவலர் மகாவித்தியாலய மண்டபத்தில் கூடுகிறோம். அன்று சம்பந்தப்பட்டவர்கள் தமது பங்கினைச்செலுத்துவார்களாக.

— ஆ. நடராசா
(செயலாளர், 4–ம், 5–ம் தர அதிபர்கள் சங்கம்)

# சஞ்சய் காந்தி அரசியலுக்கு முழுக்கு

புதுடில்லி, மார்ச் 23 இந்திராவின் புதல்வரும் தேர்தலில் போட்டியிட்டு முதல்தடவையிலேயே தோல்வியுற்றவருமான திரு. சஞ்சய் காந்தி தாம் அரசியலில் இருந்து விலகத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்தார்.

உத்தரப் பிரதேசத்தில் அமீதி தொகுதியில் தோல்வியுற்ற பின்னர் புதுடில்லி சென்ற அவர் தம்மை ஆதரித்த மக்களுக்கும் தம்முடன் சேர்ந்து தேர்தல் பணிகளில் பாடுபட்டு உழைத்தவர்களுக்கும் தமது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

தீவிர அரசியலிலிருந்து விலகி அமைதியான ஆக்கபூர்வமான பணிகளில் தம்மை ஈடுபடுத்தப்போவதாகவும் திரு சஞ்சய் கூறினர். (இ)

## கிளைகள்

யாழ்ப்பாணம், வியா. வேலணை கிழக்கு தமிழ் இளைஞர் பேரவைக் கிளை ஊர்காவற்றுறை எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் தலைமையில் நிறுவப்பட்டது.

பின்வருவோர் உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்– தா. யோகநாதன், துணைத் தலைவர்– பொ. வீரசிங்கம், செயலாளர்– சு. சுந்தரலிங்கம், துணைச் செயலாளர்– நா.பாலச்சந்திரன், பொருளாளர்– பே. பி. சண்முகநாதன்.

நிர்வாக உறுப்பினர்களாக மேலும் பத்து அங்கத்தவர்கள் ஏகமனதாகத் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.

வேலணை கிழக்கு தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளை ஊர்காவற்றுறை எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் அலுவலகத்தில் அவருடைய தலைமையில் நிறுவப்பட்டது.

பின்வருவோர் உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்– திரு. சி. இராசரத்தினம், துணைத் தலைவர்– திரு. நி. இரத்தினம், செயலாளர்– திரு. வ. ஐயாத்துரை, துணைச் செயலாளர்– திரு. மா. சுந்தரம், பொருளாளர்– திரு கா. த. வேலாயுதபிள்ளை.

செயற்குழுவிற்கு 15 பேர் ஏகமனதாகத் தெரிவு செய்யப் பட்டனர். (இ)

## மாஸ்டர் சிவலிங்கத்துக்குப் பரிசு

மட்டக்களப்பு, புதன் ஜப்பானில் நடைபெற்ற சர்வதேச கல்வி ஒலிபரப்புக்களுக்கான போட்டியில் இலங்கை வானெலிக்கென மாஸ்டர் சிவலிங்கததால் எழுதப்பட்ட சிறுவர் நிகழ்ச்சி ஒன்றுவிசேஷ பரிசு பெற்றுள்ளது. மட்டு நகர் எழுத்தாளர் இப்பரிசைப் பெறுவது இதுவே முதல்தடவையெனலாம். மாஸ்டர் சிவலிங்கம் மட்டக்களப்பு[illegible] எழுத்தாளர் சங்கத்தில் நிறுவன உறுப்பினராக இருப்பதுடன் ஈழத்தில் நூற்றுக்குமேற்பட்ட வில்லுப்பாட்டுகளை

[7-ம் பக்கம் பார்க்க]

# தமிழ் சோஷலிஸக் கூட்டாட்சி அமைக்க இளைஞர்கள் முன்வருக

— வித்துவான் க. ந வேலன் —

பேராசிரியர் சுந்தரலிங்கம் இளைஞர்களைத் தமிழர் விடுதலைக்காகத் தம் அணிக்கு அழைக்கின்றார். அவரை அறிந்த இளைஞர்கள் குழப்பவேண்டாம் என்று வேண்டுகிறார்கள் குழப்ப வேண்டாம் என்ற வேண்டுகோளில் நிறையப் பொருள் இருக்கிறது. திரு. சுந்தரலிங்கத்தின் கடந்தகால அரசியல் வாழ்வை அறிந்தவர்களுக்கு இதன் உண்மை தெரியும் இங்கு அதனை விளக்கிக் கூற வேண்டிய அவசியமில்லை.

திரு. சுந்தரலிங்கத்தைப் போலவே பல தலைவர்கள் தமிழினத்தைக் குழப்பத்தில் ஆழ்த்தி இன்றைய நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். வேகம் நிறைந்த இளைஞர்கள் குழப்பத்தில் மூழ்கி விரக்தியினால் வீறுகொண்டு எழுந்து நிற்கிறார்கள். வேகமற்ற தலைவர்களுக்கு வேகம் ஊட்டுகிறார்கள்.

## விவாதமேடை

தமிழினத்தின் விடுதலைக்கு வேகம்மாத்திரம் போதாது. விவேகமும் வேண்டும். விவேகம் இன்மையால் வேகம்தோல்வியடைந்துள்ளமைக்கு நிறையச் சான்றுகள் உண்டு. நமது கடந்த காலப் போராட்டங்களின் தோல்விக்கும் விவேகம் இன்மையே காரணம். அதனையும் இங்கு விளக்கிக்கூற நான் விரும்பவில்லை.

### நாம் என்றும் போராட்டக்காரரே

தமிழினத்தின் உரிமைப் போராட்டம் இலங்கை சுதந்திரம் அடைந்தபின் அதுவும் தமிழ்த் தலைவர்களை அரசு ஒதுக்கிய பின், தமிழ் மொழி புறக்கணிக்கப் பட்டபின், தரப்படுத்தல் போன்றவை திணிக்கப்பட்டபின்தான் தோன்றியதல்ல.

தமிழினத்திலிருந்து சிங்கள இனமும் சிங்கள மொழியும் தோன்றிய மிகத் தொன்மைக் காலந்தொட்டுப் போராட்டம் நடைபெற்று வருகிறது. விஜயனுக்கு முன்னைய இலங்கையிலும், அனுராதபுர, பொலநறுவைக் காலங்களிலும், போர்த்துக்கேய ஒல்லாந்த ஆட்சியிலும் தமிழினம் தன் உரிமைக்காக போராடி வந்திருக்கிறது. போராட்டத்தின் முறையும் நோக்கமும் மாற்றமடைந்திருக்கலாமேயன்றி போராட்டம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டே வந்துள்ளது. எனவே போர் தமிழனுக்குப் புதிதல்ல; புதிரல்ல. போராடும் இனமாக அது இருந்த காரணத்தாலேயே அது பூண்டோடு அழிந்திடாது வாழ்ந்து வருகின்றது. போராட்ட காலங்களில் வேகம் காட்டுவதும் ஏனைய காலங்களில் சோர்ந்து விடப்படுவதும் அதன் இயல்பாய் விட்டது.

'தமிழா, கத்தியைத் தீட்டாதே புத்தியைத்தீட்டு' என அறிஞர் அண்ணா கூறினார். ஈழத்தமிழர் செவியில் அது ஏறவில்லை. அவர்கள் இன்னும் கத்தியைத்தான் தீட்டுகிறார்கள். தன்னலமற்ற தலைவர்களான காந்தியைப்போல, காமராஜரைப்போல இங்குஎவரும் தோன்றவில்லை. 35லட்சம் தமிழ்ப்பேசும் மக்களின் உரிமைக்காகப் போராட இந்த இக்கட்டான வேளையிலும் 24 மணித்தியாலமும் தொண்டு செய்ய ஒருவர் இல்லை. [இன்று சில இளைஞர்கள் முன்னிற்கிறார்கள்] இந்தத் தாழ்ந்த தமிழினத்துக்காக ஒரு தமிழ்த் தினசரியில்லை. கோர்ட்டடி வேலை பார்த்து ஓய்ந்தநேரம் சனசமூகத்திற்கு வந்து ஒரு பொங்கல் விழாவில், ஒருபாரதிவிழாவில் பேசிவிட்டுப் போவதால் இனம் விடுதலை அடைந்து விடாது. இதன் அவசியத்தை காலஞ்சென்ற திரு. வன்னியரிடமும் அன்பர் அமிர்தலிங்கத்திடமும் பல்லாண்டுகளுக்கு முன் கூறியுள்ளேன்.

### நமது தலைவர்கள்

அரசியல் தலைவர்கள் இரு வகைப்படுவர். ஒருவகையினர் செயற்படுபவர்கள்; மற்ற வகையினர் சம்பவங்களை நிகழவிடுபவர்கள். நாம் பெற்றுவந்திருப்பது இரண்டாவதுவகைத் தலைவர்களையே. சட்டமேதை பொன்னம்பலம், பேராசிரியர் சுந்தரலிங்கம், மூதறிஞர் செல்வநாயகம் போன்றோர் சம்பவங்களை நிகழவிட்டு அவற்றால் இழுத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள். பேராசிரியர் சுந்தரலிங்கம் இவ்வுண்மையினை 'ஈழநாடு' விவாதமேடையில் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

மேற் குறிப்பிட்ட தலைவர்களுடைய அரசியல் அவர்களையே மையமாகக் கொண்டு அமைந்தது. *மக்களை, ஏழைகளை மையமாகக் கொள்ளவில்லை. மேலும் அது தமிழ் இனத்தையோ, தமிழ் மொழியையோ, தமிழ் கலாசாரத்தையோ மையமாகக்கொண்டும் அமையவில்லை. இவர்கள் இனம், மொழி, கலை முதலியவற்றால் தம்மை வளர்க்கத் துணிந்தவர்கள். மனிதாபிமானம்மாத்திரமல்ல, மொழிப்பற்று, நாட்டுப்பற்று முதலியனவும் இவர்களிடம் உண்மையாக இருக்கவில்லை. ஆனால் இருப்பதுபோல் காட்டிக் கொண்டார்கள்.

பக்கத்து நாட்டில் இந்து பரம்பரையைச் சேர்ந்த ஜின்னா இஸ்லாமியருக்கு நாட்டைப் பிய்த்து எடுத்தார். ஆம், பாரத அன்னையை மேற்கிலும் கிழக்கிலுமாக ஜின்னா பிய்த்துத்தான் எடுத்தார். முதல் வகைத் தலைவராகிய காந்தி அடிகளின் போராட்டத்தில் சம்பவங்களை நிகழவிட்டுத் தன் காரியத்தைச் சாதித்துக் கொண்டார் ஜின்னா. இந்த திகழ்ச்சி ஓர் இரகசியமல்ல; பல்லாயிரமாண்டுகளுக்கு முன் நடந்ததல்ல. நம் கண் முன்னே நடந்தது. இங்குள்ள தலைவர்கள் விவேகமுடையவர்களாயிருந்திருந்தால், ஆங்கில ஆட்சியிருக்கும்போதே தமிழகம் பிரிக்கப்பட்டிருக்கும்.

சட்டமேதை பொன்னம்பலம் மிகச் சிறந்த விவேகி. அந்த விவேகம் சட்டத்துறையோடு அமைந்துவிட்டது. சட்டப் புலமையினால் வழக்குகளை வெல்லலாம். குற்றவாளிகளை; ஏன் கொலைகாரர்களைக்கூடத் தலை நிமிர்ந்து வாழச் செய்திருக்கிறார் அவர். ஆனால் அந்தப் புலமையினால் தமிழினத்தின் உரிமைகளை வென்றெடுக்க முடியாது. மனித உரிமைகள் சட்டப் பிரச்னைகள் அல்ல. அவை மனிதாபிமானப்பிரச்னைகள். மனிதாபிமானத்தினாலேதான் அவை வென்றெடுக்கக் கூடியவை. மனிதாபிமானம் மிக்கவர்களைத் தமிழர்கள் இன்னும் தங்கள் தலைவர்களாக ஏற்கவில்லை. இளைஞர்கள் மனிதாபிமானம் மிக்கவர்கள்; அவர்களுக்கு வழி விட்டு விலகி நிற்போம்.

### நமது இடதுசாரிகள்

நாட்டின் சுதந்திரத்துக்கு முதன் முதலில் குரலெழுப்பியவர்கள் இடதுசாரிகளேயானாலும் சுதந்திரத்துக்குப் பின் ஆட்சி நடத்தியவர்கள் வலதுசாரிகளே. ஆங்கில அரசு தம்மை எதிர்த்த இடதுசாரிகளைப் புறக்கணித்துத் தமக்குச் சாதகமான வலதுசாரிகளிடமே ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்ததில் ஆச்சரியமில்லை. மனிதாபிமானம்மிக்கவராயினும் இடதுசாரிகளால் ஆட்சியைக் கைப்பற்ற முடியாத நிலை தொடர்ந்து இருந்துகொண்டே வந்தது. இதற்கான முக்கியகாரணம் என்ன? இடதுசாரிகளிடம் தேசியத் தன்மை குறைந்து காணப்பட்டது. அவர்கள் மொழி, இனம், மதம், கலாசாரம் போன்ற உணர்வுகளைத் தக்கபடி மதிக்கத் தவறிவிட்டார்கள். பரவலாகக் காணப்பட்ட இந்த இடதுசாரிப் போக்கு தமிழ்ப் பகுதிகளில் இடதுசாரி இயக்கம் பரவுவதற்குப் பெருந்தடையாக அமைந்தது. அவர்கள் பொருளாதாரப் பிரச்னைக்கே முதன்மை வழங்கினார்கள். முதலாளி தொழிலாளி என்ற வர்கப் போராட்டத்தையே சிந்தித்தார்கள்.

வர்க்கப்போராட்டத்தின் மூலம் ஆட்சியைக் கைப்பற்ற இடதுசாரிகள் மிகவும் முயன்றார்கள். இந் நாட்டில் உள்ள வர்க்கப் பிரிவைவிட அதிக சக்தி வாய்ந்த மொழி, இனம் மதம் போன்ற சக்திகளைச் சிங்கள நாட்டில் திரு. பண்டாரநாயக்கா போன்றவர்களும் தமிழ்நாட்டில் திரு. ஜி. ஜி., திரு. செல்வநாயகம் போன்றவர்களும் தக்கபடி பயன்படுத்தினர். பண்டாரநாயக்கா பிரதமராக வரும் வாய்ப்பினையும்பெற்றார். தமிழ் நாட்டில் பொன்னம்பலமும் செல்வநாயகமும் ஒருவர் பின் ஒருவராக அமோக ஆதரவைப் பெற்றனர்.

### ஏன் இந்த விரக்தி ஏன் இந்தத் தோல்வி

பண்டாரநாயக்காவின் தலைமையிலும் சிறிமாவின் தலைமையிலும் இடதுசாரிகள் நம்பிக்கை வைத்தனர். முன்னேற்றத் திட்டங்கள் பல தீட்டினர். மொழி, இனம், மதம் முதலியன வெறிகளாக வளர்க்கப்பட்ட நாட்டில் சிங்களவர் பெறும் உரிமைகளைத் தமிழ் பேசுவோர் பெறமுடியவில்லை. ஆட்சி திட்டிய முற்போக்குத் திட்டங்களுக்குத் தமிழ்ப்பிரதிநிகள் தேசக்கரம் நீட்டியதோடு எதிர்ப்பும் காட்டினர்.

ஒற்றையாட்சியில் பருத்தித்துறையில் இருந்து பாணந்துறைவரை தமிழன் தலைநிமிர்ந்துவாழவேண்டுமெனக்குரலெழுப்பினார்பொன்னம்பலம் கூட்டாட்சியில்தான் தமிழன் தலைநிமிர முடியுமென்றார் செல்வநாயகம் மக்கள் எல்லாவற்றுக்கும் கைதட்டினார்கள்.

சம அந்தஸ்து. மாவட்ட சபை நான்கு அம்சத்திட்டம் இவற்றைப்பெறக் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் சத்தியாக்கிரகம் சட்டமறுப்பு பேச்சுவார்த்தை ஒப்பந்தம் பந்தம் இப்படி எத்தனையோ வழிகள். இவற்றால் ஒரு பயனுமில்லை என்ற முடிவை இத்தனை ஆண்டுகளுக்குப்பிறகு கண்டுபிடித்திருக்கிறார்கள் இந்த முடிவு பார்பரின் தமிழினத்தின்மீது திணிக்கப் பட்டுள்ளது.

ஈழத்தமிழகம் அமைப்பதே தமிழினம் உரிமையோடு வாழ்வதற்கு வழி என வட்டுக் கோட்டைத் தீர்மானம் கூறுகிறது. சம்பவங்கள் நிகழ்கின்றன. தலைவர்கள் பின்பற்றுகிறார்கள். என்ற பேராசிரியர் கூற்று மீண்டும் உண்மையாகிறது.

### கூட்டாட்சியையே விரும்புகிறேன்

தமிழ்ப் பிரதிநிதிகள்தான் தமிழ் மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும்உண்மையான பிரதிநிதிகள் எனக்கொண்டால், நம்மிடையே பிரிவினைகேருவோரும், ஒற்றையாட்சி கோருவோருமென இருவகையினர் உளர்.

இவையிரண்டுக்கும் அப்பால் வேறு ஒரு கருத்தினை முன்வைக்க விரும்புகிறேன். தமிழரசுக் கட்சியால் இன்று முற்றாகக் கைவிடப்பட்டதும் அது நேற்றுவரை கோரிவந்ததுமான கூட்டாட்சிக் கொள்கையே அக்கருத்தாகும். இன்று இக்கொள்கைக்குப் பிரதிநிதிகள் இல்லாததுமாத்திரமல்ல, ஆதரிக்கும் கட்சிகளும் இல்லை.

பிரிவினைக் கோரிக்கைக்கு ஆய்வற்ற ஆரவார ஆதரவிருப்பது நன்கு புலனாகிறது. இந்தக் கோரிக்கையே முடிவு என்ற நிலைக்கு இளைஞர்கள் தள்ளப்படக் காரணம் என்ன? இந்த நாட்டை ஆண்டுவரும் ஐ. தே. கட்சியும், ஸ்ரீலங்கா கூட்டு முன்னணிக் கட்சியும், தமிழ்க்காங்கிரசும், தமிழரசுக் கட்சியுமே இதற்குப் பொறுப்பாவர்.

விரக்தியுற்ற சிங்கள இளைஞர் அங்கு புரட்சியிலீடுபட்டதும் விரக்தியுற்ற தமிழ் இளைஞர் இங்கு பிரிவினைகோரி வன்முறையிலீடுபடுவதும் வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்த நிகழ்ச்சிகளாய்விட்டன. இளைஞர்களின் செயற்பாட்டினை நாம் ஆதரிக்காவிட்டாலும் செயலின் அடிப்படையிலுள்ள தார்மீக உந்தலை நாம் மதித்தாகவேண்டும்.

காமராஜர் வகுத்த திட்டம் போலத் தமிழ்ப்பகுதி அரசியலைத் தூய்மைசெய்யவேண்டும். ஆனால் ஆண்டபரம்பரை மீண்டும் ஆளநினைக்கிறது. அவர்களாக விலகமாட்டார்கள். தமிழினத்தின் நன்மைகருதி அவர்கள் விலகவேண்டும். அந்த இடங்கள் தன்னலமற்ற, அறிவு, ஆண்மை, ஆற்றல், நடுநிலைமைமிக்கோரால் நிரப்பப்படவேண்டும்.

### முடிவுதான் என்ன?

இன்றுள்ளநிலையில் ஒற்றையாட்சியில் தமிழினம் சிறுகச் சிறுக அழியும். பிரிவினையால் விரைந்து அழியும். கூட்டாட்சி ஒன்றே இன்றைய எமதுநிலையில் பெறுவதற்கும் வாழ்வதற்கும் ஏற்ற ஆட்சியாகும். இதுவே தமிழினத்துக்குத் தக்க அரசியல் யாப்பு.

இந்த யாப்பின்படி ஈழத்தமிழகம் என ஒருபிரதேசம் அமையும். அதனை நிர்வகிக்கும் உரிமை தமிழ்பேசும் கைக்கு மாறும். தமிழ்பேசும் மக்களின் மொழி, மதம், கலை, பொருளாதாரம் முதலியவற்றைப்பேணும் உரிமை தமிழ் பேசும் மக்களின் கையிலேயே இருக்கும். அதேவேளையில் சிங்களப் பிரதேசத்தில்வாழும் பல லட்சம் தமிழ்பேசும் மக்கள் இடம்பெயராது வாழவும் முடியும்.

ஈழத்தமிழகத்தில் சோஷலிஷமே பொருளாதார, சமூகக் கொள்கையாக விளங்கும். ஆள்வோரும், ஆளப்படுவோரும் இல்லாத சமூகமே கம்பன் கண்டது; கால்மாக்ஸ் திட்டப் வகுத்தது காந்திகண்ட ராமராச்சியமும் அதுவே. ஆனால்ஆண்டபரம்பரை ஆளும் பரம்பரை என்ற] பாரம்பரியம் அடியோடு அழிக்கப்படும்.

ஈழத் தமிழகத்தைப் பிரித்தெடுத்தாலும் அடுத்தவீட்டுக்காரன் சிங்களவன் என்பதை நாம்மறத்தல்கூடாது. எனவே நட்பாற்ற முடியாவிட்டாலும் அவனைப் பகையாதுவாழவேண்டியது இராசதந்திரம்.

### சோஷலிசக் கூட்டாட்சி

சிறிலங்கா கூட்டு முன்னணி ஆட்சியில்தான் சிங்கள மக்களுக்கு மாத்திரமல்ல, தமிழருக்கும் பல நன்மைகள் கிடைத்திருக்கின்றன. அந்த நன்மைகளைக்கூடத் துரதிர்ஷ்டவசமாகத் தமிழ்ப்பிரதிநிகள் எதிர்த்துத் தமிழ்மக்களுக்குத் தீராத வசையை ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

அவர்கள் 72 வீதத்தினர். நாம் 28 வீதமே. தமிழரின்றி அவர்கள் ஆட்சியை அமைக்கலாம். ஆனால் தமிழ்மக்களின் ஒத்துழைப்பின்றி ஆட்சியை நிம்மதியாக நடத்தமுடியாது.

தென்னிலங்கையில் முற்போக்கு ஆட்சி பதவிக்கு வருவது தவிர்க்க முடியாதது. அப்போது உரிமைபெற இப்போதே ஆயத்தம் செய்வோம்.

சிங்களஇனம் தோன்றுவதற்கு முன்பே ஈழம் முழுவதும் வாழ்ந்தவர் தமிழர் என்னும் உண்மையைச் சிங்களச் சரித்திரப் பேராசிரியர்களே ஒப்புக் கொண்டுள்ளனர். பின்னர் ஏன் தமிழினம் தன்னைச் சில மாவட்டங்களுக்குள் மாத்திரம் குறுக்கிக்கொள்ளவேண்டும்?

எனவே தமிழ் சோஷலிசக் கூட்டாட்சியை அமைக்க இளைஞர்களேமுன்வருக. (அ)

---

## பார்வையிட்டனர்

வேலணை, புதன் மட்டக்களப்பு, திருகோணமலை, காங்கேசன்துறை, மூதூர் பருத்தித்துறை, கல்முனை. முதலிய இடங்களைச் சேர்ந்த ஏழு மருத்துவத் தாதிமாரும், இருபத்தியொரு மருத்துவமாதரும் சேவைக்காலப் பயிற்சியின் பொருட்டு ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த புளியங்கூடல் மாதிரிகிராமத்திற்குச் சென்றனர், அங்கு சுகாதார பரிசோகர் திரு. கி. இராமச்சந்திரன், சுகாதாரத் தொண்டர்கள் சகிதம் இவர்கள் இம் மாதிரிக் கிராமத்தின் வேலைத் திட்டங்களைப் பார்வையிட்டனர். (உ)

## ஜனதா...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி உறுப்பினர்களும் இவர்களுக்கு ஆதரவாக உள்ளனர்.

### அறுதிப் பெரும்பான்மைக்கு 2 தொகுதிகள் வேண்டும்

ஜனதா கட்சி தனித்து அறுதிப் பெரும்பான்மையைப் பெற இன்னும் 2 தொகுதிகளே தேவை என்பது குறிப்பிடத்தக்கது.

### காங்கிரஸுக்கு 153 தொகுதிகள்

ஆளும் கட்சியாக இருந்த காங்கிரஸ் கட்சிக்கு 153 தொகுதிகள் கிடைத்துள்ளன. அதன் தோழமைக் கட்சிகளான எம். ஜி. ஆரின் அ. அ. தி. மு. க. வுக்கு 19 தொகுதிகளும் இந்திய கம்யூனிஸ்ட்கட்சிக்கு 7 தொகுதிகளும் கிடைத்துள்ளன. இரண்டு சுயேச்சை உறுப்பினர்களும் காங்கிரஸுக்கு ஆதரவாக உள்ளனர். (இ)

## இந்திய...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. ஜிம்மி கார்ட்டர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தியத் தேர்தலில் மக்களின் சீரியபங்கு ஜனநாயகத்தில் நம்பிக்கைகொண்ட உலக நாடுகளுக்கு ஓர் ஊக்க சக்தியாக அமையும் என்றும் திரு. கார்ட்டர் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக வழிமுறைகள் இந்தியாவில் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும் எனத் தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ)

## கோபாலன்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி]

கேரளத்துக்கும் இந்தியாவுக்கும் பேரிழப்பு என்று பிரதமர் திருமதி இந்திரா வெளியிட்டுள்ள அனுதாபச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

### சென்னையிலும்

சென்னையில் நூற்றுக்கணக்கான கம்யூனிஸ்ட் தொண்டர்கள் மௌன ஊர்வலம் ஒன்றை நடத்தினர். (இ)

மரதன் ஓட்டத்தில்

# முதல் மூன்று இடங்களையும் பெற்ற சகோதரர்கள்

நல்லூர், புதன்

யாழ். புற்றுநோய் ஆஸ்பத்திரி நிதிக்காக யாழ் லயன் களியாட்டு விழாவில் மாஸ்கன்ஸ் லிமிட்டெட் கொழும்பு ஸ்தாபன ஆதரவில் சனிக்கிழமை காலை யாழ். விளையாட்டரங்கில் ஆரம்பமான 26 மைல் மரதன் வீதிஓட்டப் போட்டிக்கு பிரதம விருந்தினராக இலங்கை மாவட்ட லயன் கழகத் தலைவர் திரு. பிரான்சிஸ், ஏ. வர்ணகுலசூரியா கலந்துகொண்டார்.

யாழ் விளையாட்டரங்கில் ஆரம்பமான 26 மைல் வீதி மரதன் ஓட்டப்போட்டி ஆரம்பமாகிஇறுதிவரை ஒருகோஷ்டியாகவே வீரர்கள் ஓடிவந்தமை ரசிகர்களைக் கவர்ந்தது. யாழ் விளையாட்டரங்கில் வந்து முடிவடைந்த மரதன் ஓட்டப் போட்டியில் திரு. ஆர், திருநாவுக்கரசு முதலிடத்தையும், திரு. ஆர். இராஜேந்திரன் இரண்டாம் இடத்தையும் திரு. ஆர். தியாகராச மூன்றும் இடத்தையும் தட்டிக் கொண்டனர். இவர்கள் 26 மைலை 2மணி 56 நிமிடங்களில் ஓடி முடித்தனர். வெற்றிவாகைசூடிய மூவரும் பண்டத்தரிப்பைச் சேர்ந்த ஓர் குடும்பத்தின் சகோதர வீரர்களென்பது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியில் இரண்டாம் இடத்தைப்பெற்ற திரு. ஆர் இராஜேந்திரன் அண்மையில் விளையாட்டமைச்சின் ஆதரவில் நடைபெற்ற அகில இலங்கை மரதன்ஓட்டிப் போட்டியிலும் வெற்றிபெற்றவராவார். [உ]

# மட்டரகரசனையைவளர்க்கும் நூல்கள் தவிர்க்கப்பட வேண்டும்

## மட்டக்களப்பு எழுத்தாளர் கருத்தரங்கில் கருத்து

மட்டக்களப்பு, புதன்

''தரமான இலக்கியசஞ்சிகைகளும் தரமான இலக்கிய நூல்களும் ஈழத்தின் இலக்கிய உலகில் பெருகவேண்டுமானல் வாசகர்களிடையே கீழ்த்தரமான ரசனை மாற வேண்டும். வாசகர்களின் மட்டரகரசனைக்குத் தீனிபோடும் வகையில் நூல்கள்வெளிவருவதும்தவிர்க்கப்படவேண்டும்''.

இவ்வாறு மட்டக்களப்புத் தமிழ் எழுத்தாளர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த 'அலை'விமர்சன அரங்கில் உரையாற்றிய 'அலை' இலக்கிய ஏட்டின் நிர்வாக ஆசிரியரான திரு. அ. யேசுராசா குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''நமது கலை, இலக்கியப் படைப்புகள் எவ்வகையில் நமக்குப் பயன்படுகின்றன; நமது வாழ்வை எவ்வகையில் உயர்த்துகின்றன என்பதைக் கொண்டே ரசனையின் தரம் அமையவேண்டும். அப்படியான உயர்ந்தரசனையின்போக்கில்வெளிவரும்சஞ்சிகைகளும், அதன் வாசகர்களும் மிகக் குறைந்த அளவினதாக இருக்கலாம். ஆனல், அந்தக்குறைந்த தொகையே ஓர்உயிர்நாடியாக அமைந்து காலப்போக்கில் விரிவடைந்து சமுதாயத்தை மேம்படுத்தும். இதற்காக, கலை, இலக்கிய உலகில் ஈடுபட்டுள்ளவர்கள்—எழுத்தாளர்கள்- வாசகர்கள் இருசாராரும் முயற்சி செய்யவேண்டும். அம்முயற்சியில் அந்தரங்கசுத்தியான விசுவாசத்துடன் ஈடுபடவேண்டும். வெறுமனே கோட்பாடுகளை உச்சரிப்பதாலோ, வெவ்வேறு அணிகளுக்குள் அகப்பட்டுக் கொண்ட காரணத்தால் நசிவு இலக்கியத்திற்குத் தூபம் போடுவதாலோ உண்மையான இலக்கியம் வளரமுடியாது''.

இக்கருத்தரங்கில் பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்ட எஸ். பொன்னுத்துரை பேசுகையில் கூறியதாவது.

''நமது கலை, இலக்கியம் யாவும், தொழிலாளர்களுக்காகவும், விவசாயிகளுக்காகவும்,போர்வீரர்களுக்காகவுமே ஆக்கப்படவேண்டும் என்று மாமேதை மா சே துங் கூறியிருக்கிறார். இந்தக் கோட்பாடுகளுக்கமைய ஈழத்தில் யாராவது இலக்கியம் படைத்திருக்கிறார்களா? இந்த நாட்டில் சோஷலிசம் பேசுபவர்கள் செயலில் அதைக் கடைப்பிடிப்பதில்லை. சோஷலிசம் பேசாமல் சோஷலிஸ்டுகளாக வாழ்வதே உண்மையான முற்போக்குக் கொள்கையாகும். அவ்வாறு இல்லாமல், சுயநலநோக்கத்தோடு எழுத்தாளர்கள் இயங்குவதாலேயே நாட்டில் நல்ல இலக்கியப் படைப்புகள் தலைதூக்கமுடியவில்லை. இவ்வாருன விஷமிகளே அரசியல்ஆதாயம் கருதி, தமிழகத்திலிருந்து நூல், சஞ்சிகை இறக்குமதித் தடைக்கு ஆதரவளித்தார்கள். இத்தடை ஈழத்து இலக்கிய உலகைப் பெரிதும் பாதித்துள்ளது என்பதை இப்போது நாம் காணுகிறோம். வெளிநாட்டிலிருந்து ஆங்கில சஞ்சிகைகள், மற்றும் பிறமொழிச் சஞ்சிகைகள் ஈழத்துக்குவரலாம்;ஆனல் தமிழ் சஞ்சிகைகள் மட்டும் வரக்கூடாது என்பது என்ன நியாயம்? சஞ்சிகைத் தடையினல் ஈழத்துச் சஞ்சிகைகள் வளர்ச்சியுறுமென்று எதிர்பார்த்தது பொய்யாகப்போய் விட்டது. ஆகவே, இத்தடை நீக்கப்படவேண்டும்''.

மட்டக்களப்புத் தமிழ்எழுத்தாளர்சங்கச்செயலாளர் திரு. அன்புமணி பேசுகையில், ''ஈழத்து எழுத்தாளர்கள் கோஷ்டி மனப்பான்மையுடன் இயங்குவதால், நேர்மையற்ற விமர்சனங்களும், நடுநிலையற்ற நோக்கும் மலிந்து ஈழத்துஇலக்கிய உலகை மிகவும் நலியச் செய்துவிட்டது. இது ஒருவருந்தத்தக்கநிலை. இவ்வாருன போக்கினல் எழுத்தாளர்களுக்கே தேவையான சத்தியம் இல்லாமல் போய்விட்டது. சுயலாப நோக்கில் முதுகு சொறிதலும், அடிவருடுதலும் மிகுந்துவிட்டது'' எனக்கூறினர்.

'அலை' விமர்சன அரங்கில் தலைமைவகித்துப்பேசிய சங்கத் தலைவர் திரு. ரி. பாக்கியநாயகம் பேசுகையில், ''சஞ்சிகைத் தடையினல் ஈழத்து இலக்கிய உலகில் ஏற்பட்ட வெற்றிடம் இன்னும் நிரப்பப்படவில்லை. இத்தடை எதிர்பார்த்ததற்கு மாருக உள்ளூரிலேயே மட்டரகச் சஞ்சிகைகள் தோன்றுவதற்குவாய்ப்பளித்துவிட்டது'' எனக்கூறினர்.

இக்கருத்தரங்கில் பேசிய மட்டக்களப்புக் கலாசார உத்தியோகத்தர் திரு. எஸ், எதிர்மனசிங்கம் ''ஈழத்தில் தோன்றும் சஞ்சிகைகள் ஒழுங்காக நடைபெருத காரணத்தால், அவற்றின் மேல் வாசகர்களுக்கு நம்பிக்கை இல்லாமல் போய்விட்டது. வாசகர்களும் புதிய சஞ்சிகைகளுக்குப் போதிய வரவேற்புக் கொடுப்பதில்லை. ஆகவே, சஞ்சிகை வெளியீட்டாளரும் வாசகர்களும் பரஸ்பரம் ஒத்துழைப்பதன் மூலம் ஈழத்து இலக்கிய உலகில் ஆரோக்கியமான வளர்ச்சியை உருவாக்கலாம் என்ருர்.

மற்றும் திரு. ம. சற்குணம், எஸ். எல். எம். ஹனிபா ஆகியோரும் உரை நிகழ்த்தினர். கருத்தரங்கின்முடிவில்பார்வையாளர் குறிப்புரை இடம்பெற்றது. (அ)

# யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி மீலாத்விழா

யாழ்ப்பாணம்,வியா.

ஒஸ்மானியாக் கல்லூரியில் வழமைபோல் இம்முறையும் மீலாதுன்னபி விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. மாணவர்களினல் ஒழுங்கு செய்யப்பட்ட இவ்விழா கல்லூரி 'மஹ்மூத்' மண்டபத்தில் நடந்தேறியது.

முதல் நிகழ்ச்சியாக மௌலவி கே, றஹ்மத்துல்லாஹ் கிரு அத் ஓதினர்.

இதைத் தொடர்ந்து மௌலூது ஓதல் நடைபெற்றது. கல்லூரி மாணவ மாணவிகளும், அழைப்பின் பேரில் வண்.மேற்கு முஸ்லிம் கலவன் பாடசாலை அரபு ஆசிரியர் மௌலவி கே. றஹ்மத்துல்லா ஜதுறூஸ் மகாம் பள்ளிவாசல் பேஷ் இமாம், கே. எம். மீரான்மௌதீன்,பெரியபள்ளிவாசல் பேஷ் இமாம் அல்ஹாஜ் நெயினு முகமது லெப்பை, புதுப்பள்ளி வாசல் பேஷ் இமாம் ஏ. அப்துல்லா லெப்பை, காமால் பள்ளி வாசல் பேஷ் இமாம் அல்காரி எம். ஏ. மஜீத், சின்னப்பள்ளி வாசல் பேஷ் இமாம் எம். ஏ. உவைஸ் ஆகியோரும் மாதம்பை அரபிக் கல்லூரி அதிபர் அல்ஹாஜ் மௌலவி ஹஸ்ரத் என். அபூசாலிஹ்(மிஸ்பாஹ்) சங்கைக்குரிய மௌலாஞ அல்ஹாஜ் மௌலவி இஸ்மாயில் (ஹஸ்ரத்) ஆகியோரும் கலந்து கொண்டனர்

மௌலூத்சரீபைத் தொடர்ந்து மார்க்க உபந்நியாசம் இடம் பெற்றது. கல்லூரி அரபு ஆசிரியர் மௌலவி எம். எச். எம். இபுருஹீம் இந்நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினர். விசேஷ சொற்பொழிவாளர்களாக அல்ஹாஜ்மௌலவிஹஸ்ரத் என். அபூசாலிஹ், மௌலாஞ அல்ஹாஜ் மௌலவி இஸ்மாயில் ஆகியோரும் கலந்து கொண்டனர். கல்லூரி மாணவன் எம். ஆர். அஸ்ரப் இஸ்லாமிய கீதம் பாடினர். சுற்றில்நாரிஸா வழங்கல் நடைபெற்றது. அதிபர் நன்றி தெரிவித்துப் பேசினர். (அ)

# நெடுந்தீவு படகுசேவை அடுத்தமாதம் சீராகும்

நெடுந்தீவு, புதன்

அடுத்த மாதத்திற்குள் சகல படகுகளையும் புனரமைப்புச் செய்து சேவைக்குவிட நடவடிக்கைஎடுக்கப்படும் எனவும் நெடுந்தீவு குறிகாட்டுவான் அரசாங்கப்படகுகளில் இயந்திரம் பழுதுபார்ப்பவர் ஒருவர் நியமிக்கப்படுவார் எனவும் படகுச் சேவை சீரமைப்பு தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்ட வடபிரதேச இயந்திரப்பொறியியலாளர் திரு. எஸ். நித்தியானந்தன் உறுதியளித்தார்.

தீவுப்பகுதிப் பிரதிநிதி பண்டிதர் கா. பொ. இரத்தினத்தினல் கூட்டப்பட்ட மேற்படி கூட்டத்தில் வடபிரதேச வேலைகள் பணிப்பாளர் திரு. எஸ். பாலசுப்பிரமணியம், ஊர்காவற்றுறை நிறைவேற்றுப் பொறியியலாளர் ஆகியோர் உட்பட மேற்படிசேவை தொடர்பான உத்தியோகத்தர்களும் படகுத் தொழிலாளர்களின் சார்பில் திரு. ஆர். தம்பித்துரையும் நெடுந்தீவு முன்னேற்றக்கழகத்தின் சார்பில் திரு. நா இலட்சுமணராசாவும் மற்றும் திருவாளர்கள் இரா. சின்னத்தம்பி, சிவசங்கரப்பிள்ளை ஆகியோரும் கலந்துகொண்டனர்.

சகல படகுகளையும் துரிதமாகச் செப்பனிடுவதுடன் மேலதிக சேவை ஒன்றை நடாத்துவது குறித்தும் எந்நேரமும் சேவைக்குத்தயாரான நிலையில் படகுகளைவைத்திருப்பது குறித்தும் ஆராயப்பட்டது. இவை குறித்துத் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என வடமாநில வேலைகள் பணிப்பாளர் தெரிவித்தார். நெடுந்தீவு முன்னேற்றக் கழகப் பிரதிநிதி கேட்டுக் கொண்டதற்கமைய சில தொழிலாளிகளுக்கு வழங்கப்படாதிருந்த சம்பளப்பாக்கித் தொகையை உடன் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பணித்த திரு.பாலசுப்பிரமணியம் படகுச் சேவையில் ஏற்படும் காலி இடங்களுக்கு நெடுந்தீவைச் சேர்ந்தவர்களுக்கு நியமனங்கள் வழங்குவதில் முன்னுரிமை கொடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். (உ)



# தவக்கால நற்சிந்தனை

''இருளிலிருந்து வெளிச்சத்தை பிரகாசிக்கச் சொன்னதேவன் இயேசு கிறீஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப் பண்ணும் பொருட்டாக எங்கள் இதயங்களிலே பிரகாசித்தார்.''

(2 கொரிந்தியர், 4:6)

நாம் தேடும் ஞான ஒளி உலக இருளைப் போக்கும் பேரொளி.பல்லாயிரம் ஆண்டுகளாக எண்ணி, எண்ணி, ஏங்கி, ஏங்கி என்று வருமோ அந்த பேரின்பப் பெருஞ்சுடர் என்றெல்லாம் எண்ணிலடங்கா மாந்தர் வேண்டுதல் செய்து கொண்ட போது வாராதுவந்த மாமணியாய் வந்துதித்த அருள்நிறை ஞான ஒளி: கிறீஸ்துநாதரின் கருணை ஒளியாகும். அந்த ஒளியின் வழிச்சென்ருல் நமக்கு இன்னல் ஏது? பயம் ஏது?

—ஞானஒளி

## மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், வியா.

'அறிவொளிக்கலை' என்ற மாதாந்தக் கையெழுத்துப் பத்திரிகையின் ஐந்தாவது ஆண்டுமலரின் வெளியீட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை மாலை அரியாலை ஸ்ரீகலைமகள் சனசமூகநிலையத்தில் நடைபெறவிருக்கிறது.

இம் மலரினை பிரபல எழுத்தாளர் திரு. கே. டானியல் வெளியிட்டுவைப்பார்.

செல்வன க. தங்கராஜா தலைமையில் இவ்விழா நடைபெறும்.

''இக்கால நாகரிகத்தால் பாதிக்கப்பட்டவர்கள் பெண்களே'' என்பது பற்றிய விவாதமேடையும் இடம் பெறும். (உ)

## இன்று எழுச்சிக் கூட்டம்

யாழ்ப்பாணம், வியா.

கட்டுவன் சந்திக்கு அருகாமையில் தமிழ் இளைஞர் பேரவையின் எழுச்சிக் கூட்டம் இன்று வியாழக்கிழமை நடைபெறவிருக்கிறது.

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், கவிஞர் காசி ஆனந்தன், திரு. அ. அமிர்தலிங்கம், திரு. வி. ஆனந்தசங்கரி எம். பி., திருவாளர்கள் மு. திருநாவுக்கரசு,திரு. தா. திருநாவுக்கரசு உட்படமற்றும்பலரும் உரையாற்றுவர். (உ)

• • •

# ''ஜி. ஜி காலத்திலேயே தமிழ்ப் பகுதிகளில் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன''

யாழ்ப்பாணம், வியா.

''மறைந்த தலைவர் ஜி. ஜி. பொன்னம்பலம் அமைச்சராக இருந்தபொழுது தமிழ்ப்பகுதிகளில் சீமெந்துத் தொழிற்சாலை, கடதாசி தொழிற்சாலை, ரசாயனத்தொழிற்சாலை முதலியவற்றை நிறுவினர். அதன்பின்னர் கடந்த பலவருட காலமாகத் தமிழ்ப் பகுதியில் இன்றுவரை ஒரு தொழிற்சாலையாவது நிறுவப்படவில்லை''

கொக்குவில் நந்தாவில் அம்மன்கோவிலடியில் அமரர்களான ஜி. ஜி. பொன்னம்பலம், மு. திருச்செல்வம் ஆகியோரின் அஞ்சலிக்கூட்டத்தில் பேசிய நல்லூர்த் தொகுதிக் கூட்டணி அமைப்பாளர் திரு. எம். ஆலால சுந்தரம் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. சி. பொ. வேலாயுத பிள்ளை தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் அமரர்களான ஜி. ஜி. பொன்னம்பலம், மு. திருச்செல்வம் ஆகியோரின் உருவப்படங்களுக்கு மாலைசூட்டப்பட்டதுடன் இரு நிமிடநேரம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

கவிஞர் காசிஆனந்தன் பேசும்பொழுது, இளைஞர்கள் பாலஸ்தீன இயக்கம்போல இயங்கவேண்டிவரலாமென்றும் விடுதலைபெற்ற இளைஞர்கள் மேலும் சிறைவைக்கப்படலாம் என்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் கீழ் தமிழ் இளைஞர்பேரவை இயங்கவேண்டுமென்றும் கூறினர்.

கூட்டணிச் செயலதிபர் திரு. ஏ. அமிர்தலிங்கம் பேசும்போது தமிழர்விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் கொடியின் கீழ் ஈழத்தமிழகம் அமைத்தே தீருவோம் என்று கூறினர்.

வண்ணை ஆனந்தன், மாவை சேனாதிராசா, திரு. இ. விஸ்வநாதன், பொன் மதிமுகராசா, திரு. இ. சுப்பிரமணியம் ஆகியோரும் பேசினர்கள். (க)

## கண்தான வங்கிக்கு அன்பளிப்பு

கொழும்பு, புதன்

இலங்கை கண்தான வங்கிக்கு அபுதாபி 10 ஆயிரம் அமெரிக்க டாலரை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இவ்வங்கி உலக நாடுகளுக்கு கண்களைத் தானம் செய்துவருவது தெரிந்ததே. (இ)

7-வது வெற்றி வாரம்!
மனோகரா (யாழ்ப்பாணம்) எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா வீரப்பா - நிர்மலா தினசரி 4 காட்சிகள் நடித்த
இதயக்கனி
(ஈஸ்ட்மன்கலர்)

RIO (Jaffna) Grand Release From Today TONY CURTIS in
COUNT OF MONTE CRISTO
Daily 4 Shows
உலகப் புகழ்பெற்ற நாவலாசிரியரான அலெக்சாண்டர் - டுமாவின் பிரமிப்பூட்டும் கதை.
டான்டே ஒரு புரட்சி வீரன். உலகப் புகழ்பெற்ற "சாட்டு'' என்னும் சிறைச்சாலையில் சூழ்ச்சியாலும், சதியாலும், பணக்காரர்களும் நிலப் பிரபுக்களும் அவனைச் சிறையிலிட்டார்கள்.
சிறையிலிருந்து தப்புகிறான் டான்டே. கிறிஸ்றோ என்னும் தீவில் தங்கம் கண்டுபிடிக்கிறான். இந்த ஐஸ்வரியத்தை தன் சுயதேவைக்கு அவன் பயன்படுத்தவில்லை.
தன் எதிரிகளைப் பழிக்குப்பழி வாங்கவும் தன் லட்சியத்தை வென்றெடுக்கவும் அவன் தயாராகிறான்... முடிவு?
கவுண்ட் ஒப் மொண்டிகிறிஸ்ரோ

REGAL (JAFFNA) Daily at 4-45 7-00 & 9-30 P. M. only LESLIE PHILLIPS in
SOME WILL, SOME WON'T
(Color)

ராணி [யாழ்நகர்] எம். ஜி. ஆர். - கே. ஆர். விஜயா நாகேஷ் நடித்த தினசரி காட்சிகள்
நல்ல நேரம்
(புத்தம் புதிய பிரதி)

ராஜா [யாழ். நகர்] தினசரி 4 காட்சிகள் சிவாஜி -பத்மினி லலிதா - பாலையா இன்று மட்டும் நடித்த
தூக்கு தூக்கி (புதிய பிரதி)
25-3-77 முதல் இருவர் உள்ளம்

வின்ஸர் (யாழ். நகர்) அடுத்த வெளியீடு
சிவாஜி (இரு வேடங்களில்)
சௌகார் ஜானகி, உஷா நந்தினி,
வி. கே. ராமசாமி, சசிகுமார்
நடித்த
'மனிதனும் தெய்வமாகலாம்
(ஈஸ்ட்மன் கலர்)
டைரக்ஷன்: P. மாதவன்
கடைசி வாரம் தினசரி 4 காட்சிகள்
அபூர்வ ராகங்கள்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) ஃ சிவாஜி (இருவேடம) ஃ ஜெயலலிதா ஃ சுந்தரராஜன் தினசரி 4 காட்சிகள் நடித்த
பாட்டும் பரதமும்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் இப்பொழுது நடைபெறுகிறது
[யாழ். நகர்] தினசரி 4 காட்சிகள்
ஃ முத்துராமன் ஃ சுஜாதா
ஃ ஸ்ரீகாந்த் ஃ மனோரமா
நடித்த
வாழ்ந்து காட்டுகிறேன்

லிடோ போன்: 7693 சிவாஜி — தேவிகா
[யாழ். நகர்] தினசரி 10-30, 2-30, 6-30, 9-45. நடித்த
அன்புக் கரங்கள்
(புதிய பிரதி)


# போயா தினத்தில் சீவப்படும் கள்ளை என்ன செய்வது?

## நஷ்டத்தை கூட்டுறவு இலாகாவே ஏற்கவேண்டும் என்கிறார் நீதவான்

யாழ்ப்பாணம், வியாழன்

"போயா தினங்களில் தவறணைகளில் சீவல் தொழிலாளர்களிடம் இருந்து கள்ளு வாங்கப்படாததனால் அதனால் ஏற்படக்கூடிய நஷ்டத்தை கூட்டுறவு இலாகாவே ஏற்றுக் கொள்ளவேண்டும். அந்நஷ்டத்தைத் தாங்கிக்கொள்ளக் கூடிய நிலையில் ஏழைச்சீவல தொழிலாளர்கள் இல்லை''

இவ்வாறு மல்லாகம் மாவட்ட நீதவான் திரு. எம். டி. ஜேசுரத்தினம் சீவல்தொழிலாளி ஒருவர் தொடர்பான வழக்கு முடிவில் நிதியமைச்சு, கூட்டுறவுத்துறை அமைச்சு ஆகியவற்றுக்கும் கூட்டுறவு, மதுபரிபாலன ஆணையாளர்களுக்கும் அனுப்பிவைத்துள்ள குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

தெல்லிப்பளையைச் சேர்ந்த கே. கதிரன் என்ற சீவல் தொழிலாளி போயா தினத்தில் சட்ட விரோதமாகக் கள்ளு வைத்திருந்ததாக காங்கேசன்துறை மதுபரிபாலன இலாகாவினரால் குற்றஞ் சாட்டி மேற்படி வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

எதிர்தரப்பில் சட்டத்தரணி திரு. மு. திருநாவுக்கரசுவுடன் ஆஜரான சட்டத்தரணி திரு. நடராஜா "போயா தினங்களில் தவறணைகளில் பனங்கள் சீவல் தொழிலாளர்களிடம் இருந்து பெறப்படுவதில்லை. தினசரி கள் சீவப்படாவிட்டால் பனை பாதிக்கப்பட்டுவிடும். இந்நிலையில் சீவல் தொழிலாளர் என்செய்வது?'' என்று நீதவானிடம் தெரிவித்தார்.

சம்பவதினம் எதிரி பிரஸ்தாப கள்ளை இறக்கிக்கொண்டு பனையிலிருந்து இறங்கிய மறுகணமே கைதுசெய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வழக்கு விசாரணையின் போது நீதவானின் உத்தரவின்பேரில் வடபகுதி மதுபரிபாலன உதவி ஆணையாளர் திரு. வி. சபாரத்தினம், கூட்டுறவுப்பகுதி உயர் அதிகாரி திரு. பாலசுந்தரம் ஆகியோர் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர்.

"போயா ஒரு தினத்தில் மட்டும் மதுபரிபாலன இலாகா உத்தியோகத்தர்கள் வடபகுதி பனை சீவும் தொழிலாளர்கள் விடயத்தில் கண்ணை மூடிக் கொள்ளமுடியாதா?'' என்று நீதவான் மதுபரிபாலன உதவி ஆணையாளரிடம் கேட்டபோது 'போயா தினத்திலும் தம்கடமையைத் தாம் செய்யத்தான் வேண்டியுள்ளது' என்று அவர் தெரிவித்தார்.

"முதல்நாள் பனங்களை மறுநாள்வரைவைத்து பாவனையாளர்களுக்கு கொடுக்கமுடியாது. அக்கள் பழுதடைந்துவிடும்'' என்று கூட்டுறவுப் பகுதி அதிகாரி கூறினார்.

'போயா தினங்களில் சீவப்படும் கள் உடனடியாக அழிக்கப்பட்டுவிடவேண்டும்' என்று மதுபரிபாலன உதவி ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

இதனையடுத்து எதிரியை எச்சரித்து விடுதலை செய்த நீதவான் மேற்குறிப்பிட்ட அமைச்சுக்களுக்கும், ஆணையாளர்களுக்கும் அனுப்பிவைத்த குறிப்பில் பின்வருமாறு கூறியுள்ளார்:

"தவறணைகள் போயா தினங்களிலும் பனங்களை வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படவேண்டும். அதுமுடியாத பட்சத்தில் அன்றைய நாட்களில் சீவல் தொழிலாளர்களுக்கு ஏற்படும் நஷ்டத்தை கூட்டுறவுத்துறையினரே ஏற்றுக்கொள்ளவேண்டும். லட்சக்கணக்கில் லாபம் பெறும் கூட்டுறவுத்துறை இந்நஷ்டத்தை ஏற்றுக்கொள்ளலாம். ஏழைச் சீவல் தொழிலாளர்களால் அது முடியாது. மிகவிரைவில் இதற்குரிய பரிகாரம் காணப்படவேண்டும்'' (உ)

## பிரதேச சுயாட்சி—

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

உழைப்பேன். ஆதலால்தான் நான் இன்றைய அஞ்சலிக்கூட்டத்தில் கலந்து கொள்ளமுன் வந்தேன்.

இந்த நாட்டில் வாழும் தமிழர்கள் தம்மைத்தாம் ஆள்வதற்கும் தங்கள்பிரதேசத்தைக் காக்கவும் என்றும் உரிமையுடையவர்கள். தமிழர்பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் தம்மைத் தாம் ஆள்வதற்கு ஏற்ற அமைப்பை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு நாட்டை ஆளும் அரசின் கடமையாகும். இதை இந்த அரசு செய்யத்தவறிவிட்டது.

### வாய்ப்பேச்சுடன் நிற்கவில்லை

வாய்ப்பேச்சோடு நான் நிற்காது நியாயத்துக்காகப் பாடுபடும்இயக்கங்களுடன்சேர்ந்து உழைக்கத் தீர்மானித்து விட்டேன்.

நான் பொதுவுடமைக் கட்சியைச் சேர்ந்தவன். ஏதோ தனிப்பட்ட உதவியை நாடியோ, அல்லது தேர்தல் உதவியை நாடியோ இம் மேடைக்கு வந்தவனல்லன். எனது இயக்கத் தலைவர்களின் அனுமதியுடன் நான் உண்மை என்று கண்டவற்றை ஒழிவு மறைவில்லாது கூறவே முன் வந்துள்ளேன்.

"தமிழர் கூட்டணியினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆறு அம்சக்கோரிக்கைகளை அரசு ஏற்றுக் கொண்டிருந்தால் இன்றைய பிரச்னைகள் ஒன்றும்ஏற்பட்டிருக்கமாட்டாது. இவற்றை எல்லாம் அரசு தட்டிக் கழித்துவிட்டது.''

### சூரியர் விரும்பவில்லை

காங்கேசன்துறை இடைத்தேர்தலில் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தை எதிர்ப்பதற்காகவோ கூட்டணியை எதிர்க்கவேண்டுமென்றோ போட்டியிடவில்லை. நான் சார்ந்திருந்த ஒரு இயக்கத்தின் வேண்டுகோளுக்கிணங்கவே போட்டியிட்டேன். அப்போதுகூட நாம் பிரதேச சுயாட்சியை வலியுறுத்தினோம்.

பிரதேச சுயாட்சியை உள்ளடக்கிய எமது 5 அம்சத்திட்டப் பிரசுரத்தை நாம் இடைத்தேர்தலின்போது விநியோகிக்கும் பொருட்டு 10 ஆயிரம் பிரதிகளை அச்சடித்துவைத்திருந்தோம். இதை அறிந்த அமைச்சர் திரு. குமாரசூரியர் இடைத்தேர்தலுக்கான நியமனப்பத்திரங்களைத் தாக்கல் செய்வதற்கு முதல்தினம் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையின் வாடிவீட்டில் இருந்து எமது 5 அம்சத்திட்டம் பற்றிய தமது அதிருப்தியைத் தெரிவித்துக்கொண்டார். இந்த 5 அம்சத்திட்டத்தை ஏன் தயாரித்தார்கள் என்றும் கேட்டாராம். ஏனோ அவர் அத்திட்டத்தை விரும்பவில்லை.

### தரப்படுத்தல் அநியாயமே

தமிழ் மாணவர்கள் மீது திணிக்கப்பட்ட தரப்படுத்தல் கொடுமையானது. அநியாயமானதுதான். எமது தலைவர் திரு. பீட்டர் கெனமனுல் தரப்படுத்தல் குறித்து அரைகுறையாகக்கொடுத்த சிபார்சுகளும் தட்டிக்கழிக்கப்பட்டது.

இதுபோன்று தமிழ்மக்களுக்குஅரசுஇழைத்த கொடுமைகளே தமிழ்மக்களின் இன்றைய போராட்ட நிலைக்கு காரணமாகும். (இ)

## நன்றி தெரிவிக்கிறார்

யாழ்ப்பாணம், வியாழன்

இலங்கை கைதடி சைவ அநாதை இல்லப் பொதுச் செயலாளர் திரு. ஆ. கந்தையா, மேற்படி இல்லத்தின் கொடித்தினம் வெற்றி காமாக நடைபெற ஆதரவளித்த தொண்டர்களுக்கு நன்றி தெரிவித்துள்ளார். (உ)


புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-15
சனி, ஞாயிறு 10-30
ஜெய்சங்கர்
எல். விஜயலக்ஷ்மி
உயிரா மானமா

வெஸ்லி
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
ஜெய்சங்கர்
எங்க பாட்டன் சொத்து

நாகமஸ்
(சுன்னாகம்)
தினரிசரி 6-30, 9-30
சிவாஜி-உஷாநந்தினி
சனி, ஞாயிறு 2-30
ராஜபார்ட் ரங்கதுரை


## மாஸ்டர்..

(4-ம் பக்க தொடர்ச்சி)

நடாத்தியுள்ளார்.

வானொலியில் கதை சொல்லும்போது "மொனோ-ஆக்டிஸ்'' முறையில்கதைசொல்லி பல்லாயிரக்கணக்கான சிறுவர் சிறுமியரின் உள்ளங்களைக் கவர்ந்தவர். சிறுவர், சிறுமியரது மட்டுமல்லாது, வளர்ந்தவர்களும் கூட மாஸ்டர் சிவலிங்கத்தின் விசிறிகளாக இருக்கிறார்கள். இவருடைய கதை, கட்டுரைகள் ஈழத்துச் சஞ்சிகைகளிலும், தமிழகத்துச் சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன. (அ)

## "ஏதேச்சாதிகாரத்தை மக்கள் விரும்பவில்லை''

சென்னை, மார்ச். 23

"ஜனநாயக விரோத சக்திகளையும். ஏதேச்சாதிகாரத்தையும் இந்திய மக்கள் விரும்பவில்லை என்பதை தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டுகின்றன''.

இவ்வாறு தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் திரு. பி. ராமமூர்த்தி தெரிவித்தார். (இ)

ஈழநாடு
The EELANADU

# இந்திய லோக்சபா நாளை கூடுகிறது!

## முதல் தடவையாக எதிர்வரிசையில் காங்கிரஸ்

### புதிய மந்திரிசபை இன்றுதெரியும்

புதுடில்லி, மார்ச் 23

**இந்தியாவின் 6-வது லோகசபை நாளை வெள்ளிக்கிழமை கூடுகிறது. இதன் ஆட்சிக்காலம் 6 வருடங்களாக இருக்கும்.**

லோகசபைத் தேர்தலில் அறுதிப்பெரும்பான்மைப் பலம்பெற்ற ஜனதா கட்சியும் அதன் தோழமைக் கட்சிகளும் இன்று அரசாங்கத்தை அமைக்கும்.

## அமைச்சரவை இன்று பதவி ஏற்கும்

ஜனதா கட்சித் தலைவர் திரு. மொரார்ஜிதேசாய் தலைமையிலான மந்திரிசபை இன்று பதவி ஏற்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனதா கட்சியினதும் தோழமைக்கட்சிகளினதும் பெருந் தலைவர்களும் நேற்று புதுடில்லியில் கூடி புதிய அரசாங்கத்தை அமைப்பது பற்றி தீவிரமாக ஆலோசனைசெய்தனர்.

### சவான் எதிர்க்கட்சித் தலைவர்

30 ஆண்டுகளாக ஆளும் கட்சியாக இருந்த காங்கிரஸ் கட்சி இம்முறை எதிர்க்கட்சிஸ்தானத்திற்கு வந்துள்ளது. அதன் ஆட்சிமன்றக் குழுத் தலைவராக முன்னுள் வெளிவிவகார அமைச்சர் திரு. வை. பி. சவான் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இதனுல் பார்லிமெண்டில் இவரே எதிர்க்கட்சித் தலைவராக இருப்பார்.

### பிரதம கொறடா

லோகசபையின் காங்கிரஸ் கட்சிப் பிரதமகொறடாவாக முன்னுள்அமைச்சர் திரு. ரகுராமையாவும் ராஜ்யசபையின் பிரதமகொறடாவாகமுன்னுள் அமைச்சர் திரு. ஓம்மேத்தாவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

### ஜனதா அமைச்சரவை

ஜனதா கட்சியின் புதிய அமைச்சரவை பெரிதாக இருக்கமாட்டாது என்றும் பல்வேறு பிராந்தியங்களுக்கும் அதில் இடமளிக்கப்படும் என்றும் ஜனதா கட்சியின் பொதுச் செயலாளர் திரு. கே. எல். அட்வாணி கூறினுர்.

### அமைச்சர்களின் நடத்தையைக் கவனிக்க குழு

புதிய அமைச்சரவை உறுப்பினர்களின் நடத்தையையும் கோட்பாடுகளையும் கவனிக்கும் பொருட்டு 6அங்கத்ததர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு திரு. குப்தா தலைவராக இருப்பார் என்றும் அவர் கூறினுர்.

### ஜனதா காரியக்கமிட்டி தீர்மானம்

புதிய அரசு சுதந்திரத்தையும் பொருளாதாரத்தையும் தூய்மையுடன்பேணிக்காக்கும் என்றும் அரசு நம்பிக்கையுடனும் தோழமை உணர்வுடனும் முன்னேற்றப்பாதையில் தொடர்ந்து செல்லும்என்றும் ஜனதா கட்சியின் காரியக் கமிட்டி அறிவித்துள்ளது.

### ஏகமனதாகத்தெரிவு

காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு.பருவா தலைமையில் இன்று புதிய காங்கிரஸ் எம். பிக்கள் கூடியபோது கட்சியின்பாராளுமன்றத் தலைவராக திரு. வை. பி.சவான் ஏகமனதாகத்தெரிவு செய்யப்பட்டார்.

முன்னுள்நிதியமைச்சர் திரு. ஸி. சுப்பிரமணியம் அவரின் பெயரைப் பிரேரிக்க திரு. சி. எம்.ஸ்டீபன்வழிமொழிந்தார்.

### காங்கிரஸ் தோல்விக்கு

நடந்துமுடிந்த தேர்தலில் காங்கிரஸின் தோல்விக்கு அவசரகாலச் சட்டமே காரணம் என்று எதிர்க்கட்சித் தலைவராகத்தெரிவுசெய்யப்பட்ட திரு. சவான் கூறினுர். (இ)

கிளிநொச்சி

## கொலைவழக்கு எதிரிக்கு 10 வருடக் கடூழியம்

யாழ்ப்பாணம், வியாழன்

கிளிநொச்சிக் கொலை, கொள்ளை வழக்கில் எதிரிக்கு 10 வருட கடூழியச்சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனுப் எம். எம். அப்துல்காதர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் கிளிநொச்சியில் 76-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ம் தேதி கு. முருகேசு இராமு என்பவரைக் கொலைசெய்ததாகவும், அவரின் 500 ரூபா பெறுமதியான கைக்கடிகாரத்தையும் வேட்டி சேட்டையும் கொள்ளையடித்ததாகவும், பழனி இராமு என்பவர்மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் சட்டத்தரணிஇராஜராஜேஸ்வரன் தங்கராஜா சட்டத்தரணிகள் ஜே. விஸ்வநாதன், செல்வி ச. எம். ஆர். வின்சன்ட், திருமதி வி. சிறிகாந்தா, சட்டத்தரணி செல்வராஜா ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானுர். அரசதரப்பில் சட்டத்தரணி எஸ். ஸ்ரீரஞ்சன் வழக்கை நடத்தினுர்.

எதிரி கைமோசக் கொலைக் குற்றத்தையும் கொள்ளைக் குற்றத்தையும் ஒப்புக்கொண்டார்

நீதிமன்றத்தில் தூயதமிழ் உடையில் தோன்றிய எதிரியின் சட்டத்தரணி இராஜராஜேஸ்வரன் தங்கராஜா ஜூரிசபையினர் இல்லாத நிலையில் சட்டவாதம் நிகழ்த்தினுர் அவர் தெரிவித்ததாவது;- எதிரிக்கு வயது 23. அவர் 21 வயதாக இருந்த இளம்பிராயத்தில் இக்குற்றத்தைப் புரிந்துள்ளார்.

மூன்று அல்லது நான்குபேர் சேர்ந்து இக்குற்றத்தைப் புரிந்துள்ளனர். எதிரி சந்தர்ப்ப சூழ்நிலைகளால் இதில் மாட்டிக்கொண்டார். இறந்தவர் குடிபோதையில் இருந்த நிலையில் அவரும் ஆத்திரமூட்டும் விதத்தில் நடந்திருக்கிறுர்.

'எதிரியின் தகப்பனுர் தள்ளாதவயதில் வாழக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறுர். மகனைநம்பித்தான் கடன்பட்டு இவ்வழக்கிற்குச் செலவுசெய்திருக்கிறுர். மகன் வெளியில் வந்து கடனைத் தீர்ப்பார் என அவர் நம்பியிருக்கிறுர்.

நீதியரசர்: எதிரி 63-ம்ஆண்டில் நுவரேலியாவில் ஒரு திருட்டுக்குற்றத்தில் ஒருவருட நன்னடத்தைப் பிணையில்சென்றிருக்கிறுர்.

சட்டத்தரணி தங்கராசா: அப்போது எதிரிக்கு 11 வயது இருக்கும். அந்த வயதில் அறியாது செய்துவிட்டார்.

இக்கட்டத்தில் எதிரியின் தகப்பனுர் வந்து எதிரிக்குத்தற்போது26வயதென்று கூறினுர்.

சட்டத்தரணி தங்கராஜா: அப்படியானுல் அன்று 23 வயதிருக்கும்.

நீதி: அன்றுதிருட்டுக்குற்றத்திற்குக் கொஞ்சம் கடுமையான தண்டனை கிடைத்திருந்தால் இச்சம்பவத்தைச் செய்திருக்கமாட்டார்.

சட். தங்கராசா: அன்று அறிவு வளர்ச்சியில்லாததினுல், அத்திருட்டைச் செய்துவிட்டார். எதிரியைத் திருத்தும் நோக்கமாக அவருக்குக் குறைந்த தண்டனை வழங்குமாறு கோருகிறேன். அரசாங்கத்தின் நோக்கமும் இயன்றளவு குற்றவாளிகளைத்திருத்த முயலவேண்டும் என்பதுதான். அவரைத் திருத்தும்முகமாகசமுதாயத்தில் திருந்தி நடக்கும் விதத்தில் தண்டனை வழங்குங்கள்.

நீதிபதி: எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதை ஏற்றுக்கொள்கிறேன். வேறு இரண்டு பேர் சேர்ந்து செய்ததாகக் கூறப்பட்டது. அப்படியானுல் 3 பேரும் ஒரே குற்றம் செய்திருக்கிறுர்கள்.

1-ம் குற்றச்சாட்டுக்கு 8 வருடமும், 2-ம் குற்றச்சாட்டுக்கு 2 வருடமும் விதித்து தீர்ப்பளிக்கிறேன். (க—இ)

## ஆபத்தான நிலையில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துக்கொண்டிருந்தனர்.

டாக்டர்கள் ஒருவர்பின் ஒருவராக தொடர்ந்துநிலைமையை அவதானித்துக் கொண்டிருந்தனர்.

### தொடர்ந்து மயக்கம்

இரவு 1 மணிவரை நிலைமையில் எவ்வித மாற்றமுமில்லாது மயக்கடைந்த நிலையில் இருந்தார். டாக்டர்கள் தொடர்ந்து விசேட சிகிச்சையளித்தபடியிருந்தனர்.

இரத்தோட்டம், இருதய துடிப்பு மற்றும் உடல்நிலையை அறிந்து கொள்ளும் இயந்திரம் அவசரமாக பிரஸ்தாப வார்ட்டுக்கு கொண்டுவரப்பட்டு அந்த இயந்திரம் மூலம் செல்வாவின் உடலின் உள் நிலைமையை அறிவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

கட்டிலுக்கு அருகில் குளுக்கோஸ் ஏற்றுவதற்கான ஆயத்தங்களும் செய்யப்பட்டிருந்தது.

மயக்கத்துடன் காய்ச்சல் இருப்பதாகவும் நிலைமையை தாங்கள் அவதானித்துக் கொண்டிருப்பதாகவும் டாக்டர்கள் தெரிவித்தனர்.

வைத்திய அதிகாரி டாக்டர் அமரசிங்கா, ஆஸ்பத்திரி கமிட்டித் தலைவர் டாக்டர் பிலிப் ஆகியோரும் வந்து பார்வையிட்டனர்.

### இளைஞர்கள் திரண்டனர்.

பெருந்தொகையான இளைஞர்களும், வார்ட்டிற்கு வெளியில் காணப்பட்டனர். எவரும் வார்ட்டிற்கு உள்ளே செல்ல அனுமதிக்கப்படவில்லை. மக்கள் யன்னல் சீலையை அறுத்துவிட்டு யன்னலால் மயக்க நிலையிலிருந்த செல்வாவை பார்ப்பதற்கு துடியாய்த் துடித்தனர். ஒருவரை ஒருவர் இடித்துத்தள்ளிக்கொண்டு நின்றனர். பொலிசார் அவர்களை வெளியேற்றுவதில் பெரும் சிரமம் எடுத்தனர்.

ஆஸ்பத்திரி ஊழியர்களும், வார்ட்டிற்கு உள்ளே செல்ல முயன்றும் அவர்களுக்கு அனுமதி கிடைக்கவில்லை. டாக்டர்களும், அவ்வார்ட்டில் கடமைபாற்றும் ஊழியர்கள் மட்டுமே உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

மாலை 6 மணிக்கு பின்னர் எவரும் உள்ளே நிற்க அனுமதிக்கப்படாததினுல் ஆயிரக்கணக்கானேர் ஆஸ்பத்திரிக்கு வெளியில் காத்திருந்தனர்.

### தொலைபேசியில் நேமிநாதன்

நேற்றுமாலை 7 மணிக்கு திருகோணமலையிலிருந்து எம். பி. திரு. ப. நேமிநாதன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு செல்வாவின் உடல் நிலைமை பற்றி கேட்டு அறிந்து கொண்டார்.

கொழும்பு, மட்டக்களப்பு, வவுனியா ஆகிய இடங்களிலிருந்தும் நேற்று இரவு பலர் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு நிலைமையை அறிந்து கொண்டிருந்தனர். ஆஸ்பத்திரி தொலைபேசி இலக்கங்கள் எந்நேரமும் 'பிஸி' யாக இருந்தது. (த—ஆ)

## நடந்தது...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டாக்டர் அவரை பரிசோதனை செய்தபின்னர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லுமாறு ஆலோசனை தெரிவித்தார்.

இத்தகவல் உடனடியாக கூட்டணி தலைமைக் காரியாலயத்திற்கும், கூட்டணி தலைவர்களுக்கும், பிரமுகர்களுக்கும் அறிவிக்கப்பட்டது.

நண்பகல் ஒரு மணியளவில் கூட்டணி தலைவர்கள் தெல்லிப்பளைக்கு விரைந்தனர். மயக்கமடைந்த நிலையிலேயே, அம்புலன்ஸில், யாழ்ப்பாணம் பெரியஆஸ்பத்திரிக்குகொண்டு செல்ல ஏற்பாடுசெய்யப்பட்டு நேற்றுபிற்பகல் ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டார். (க-)

## எம். பிக்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. ஜெகஜீவன்ராம் இன்று புதுடில்லியில் சந்தித்துப் பேசினுர். ஜனதா கூட்டணியின் தலைவர் தெரிவு சம்பந்தமாக தாம் ஜெயப்பிரகாஷைச் சந்திக்கவில்லை என்று நிருபர்களிடம் ஜெகஜீவன்ராம் கூறினுர்.

### மொரார்ஜி ஜெகஜீவன் சந்திப்பு

திரு. மொரார்ஜி தேசாயையும் திரு. ஜெகஜீவன்ராம் இன்று சந்தித்தார். 'மரியாதைக்கானசந்திப்புஇது' என்று திரு. ஜெகஜீவன்ராம் கூறினுர் தலைவர் தெரிவு சம்பந்தமாக எதுவும் பேசவில்லை என்றுர் ஜெகஜீவன்ராம். வாஜ்பாய், ராஜ்நாராயண் ஆகியோரும் திரு. மொரார்ஜிதேசாயைச் சந்தித்தனர்.

### ஜன. காங்கிரஸின் எதிர்காலம்

ஜனநாயக காங்கிரஸ் ஜனதாவுடன் இணைவது சம்பந்தமான தீர்க்கமானமுடிவைஎடுக்கும்முழுஅதிகாரத்தையும் ஜனநாயக காங்கிரஸ் செயற்குழு திரு, ஜெகஜீவன்ராமிடம் ஒப்படைத்துள்ளது. இன்று(வியாழன்) காலைக்குள் இதுபற்றிய முடிவைத் தாம் அறிவித்துவிடுவேன் என்று ஜெகஜீவன்ராம் தெரிவித்தார்.

### அ. அ. தி. மு. க. தலைவர்

அ. அ. தி. மு, க. லோகசபை உறுப்பினர்களின் தலைவராக திரு. எஸ். வி. சோமசுந்தரம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தலைமையில் சென்னையில் நடந்த கூட்டத்தில் இததெரிவு நடந்தது. (ஆ)

## பிரதேச..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டும் இயக்கங்களுடன்இணைந்து போராடுவது எனது தலையாய கடமையாகும்'' என்றும் திரு. பொன்னம்பலம் கூறினுர்.

இன்று இந்த நாட்டின் தலைவர்கள் எவரினுலுமே தீர்க்க முடியாது என்று கருதப்படும் அளவுக்கு தமிழ்மக்களின் பிரச்னை பூதாகாரமாக உருவெடுத்துள்ளது. இதற்கெல்லாம் காரணம் ஆட்சியாளர்களே. இதனை நானும் நான் சார்ந்துள்ள கட்சியும் பல தடவைகள் எடுத்துக்கூறினேம். அரசு அதில் அக்கறை கொள்ளவில்லை. இன்று நிலைமை மோசமாகிவிட்டது என்பதை மறுக்கமுடியாதென்றும் திரு. பொன்னம்பலம்கூறினுர்.

அமரர்கள் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், திரு. எம் திருச்செல்வம் ஆகியோருக்கு அஞ்சலிசெலுத்தும்பொருட்டு தொல்புரம் சந்தைக்கு அருகாமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

திரு. வ. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. பொன்னம்பலம் மேலும் கூறியதாவது:

''நியாயம், தர்மம்என்பவற்றுக்காக நான் எங்கிருந்தாலும்

(7-ம் பக்கம் பார்க்க)

## மரண அறிவித்தல்

### திருமதி நாகலிங்கம் அன்னம்மா

திருமதி நாகலிங்கம் அன்னம்மா காலமானுர். இவர் முன்னுள் யாழ். நகர உதவி மேயரும், யாழ் அரசினர் ஆஸ்பத்திரி கமிட்டி உறுப்பினரும், சீமெந்துத் தொழிற்சாலை பைக்கிங் பிளான் போர்மன் எஸ். என். மார்க்கண்டுவின் அன்புத்தாயாராவார். அன்னுரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக யாழ்ப்பாணம் 82/2, கச்சேரி நல்லூர் வீதி இல்லதிலிருந்து இன்று பிற்பகல் நான்கு மணியளவில் செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

5777

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு மார்ச் மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu P. O. Box 49, Jaffna) Telegram: Eelanadu, [Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.